# கொடிகாமம் பஸ் சாரதி கொலை; மேலும் மூவர் கைது

## ரிமாண்டில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், வியா

கொடிகாமம் பஸ் சாரதி கொலை சம்பந்தமாக, இலங்கை போக்குவரத்துசபை கண்டக்டரொருவரும், மலைநாட்டு தமிழ்வாலிபர் ஒருவரும், மற்றுமொருவரும், பொலிஸாரினல் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். அச்சுவேலியைச்சேர்ந்த நவம் என்றழைக்கப்படும், நவரத்தினம் என்பவரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சிதம்பரபிள்ளை மகேஸ்வரன் (மீசாலை) பஸ் கண்டக்டரான சங்கரபிள்ளை கனகசபை (சரசாலை) பெருமாள் இராமலிங்கம் (மஸ்கேலியா) ஆகிய மூவரும் இம் மாதம் 4 ம் தேதி பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டதை தொடர்ந்து மாஜிஸ்திரேட் அவர்களை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டிருந்தார்

இக்கொலை சம்பந்தமாக ஏற்கனவே ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களான தம்பிமுத்து கணேசமூர்த்தி, சின்னத்தம்பி திரவியநாயகம், முருகேசுகணேசமூர்த்தி ஆகிய மூவரும் மற்றும் சந்தேகநபர்களான சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரன், சங்கரப்பிள்ளை கனகசபை, பெருமாள் இராமலிங்கம் ஆகியோரும் நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சநதேகநபர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டனர் விசாரணையைப் பார்ப்பதற்கு, கோர்ட்டின் உள்ளேயேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் புறக்டர் எஸ். அம்பலவாணர் ஆஜராஞர். மாஜிஸ்திரேட் விசாரணையை இம் மாதம் 15ம் தேதிக்கு ஒத்தி வைத்து அதுவரை சந்தேக நபர்களை ரிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டார்.

கொழும்பு மாநகரத்தில் இக்கொலை சம்பந்தப்பட்ட ஒருவரை பொலிஸார் தேடுதல் நடத்தியதாகவும் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும், இக்கொலை சம்பந்தமாக விசாரணைசெய்ய நியமிக்கப்பட்ட குழுவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக லொறி ஒன்றும் பொலிஸாரால் தேடப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் கூறிஞர்.

இக்கொலை சம்பந்தமாக, விசாரணைசெய்ய நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட பொலிஸ் கோஷ்டியினர் இரவு பகலாக பல பகுதிகளில் விசாரணை நடத்திவருகின்றனர்.

Reg stered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 12

இதழ்: 58

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 27 ஸபர் 2 வியாழக்கிழமை [9-4-70]

புத்தாண்டை பொலிவுடன்
கொண்டாட
உங்களுக்கும் உங்கள் குழந்தைச்
செல்வங்களுக்கும் தேவையான
சகல விதமான
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
மலிவான விலைகளில்
பெற்றுக் கொள்ளலாம்
விக்னேஸ்வரா
ஜவுளி மாளிகை
பஸ் நிலையத்துக்கு முன்
யாழ்ப்பாணம்.

# வடபகுதி பென்சன்காரர் அவதி; யாழ். கச்சேரி அசமந்தம்!

## "திறைசேரி உத்தரவை உடனடியாக நிறைவேற்ற ஊழியர் போதாது"

### — அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், வியாழன்

ஓய்வுபெற்ற சகல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பளக் கமிஷனின் சிபார்சின்படி அதிகரிக்கப்பட்ட பென்சன் பாக்கிப் பணத்தை புது வருடத்துக்கு முன்னர் வழங்குவதில் யாழ்ப்பாணம் அரசாங்கசெயலகம் தாமதம் காட்டுகிறதாம்.

பிரஸ்தாப பென்சன் பாக்கிப் [illegible]ணத்தை கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து கணக்கிட்டு எதிர்வரும் சிங்கள, தமிழ்ப் புதுவருடத் [illegible] மாறு சகல [illegible] திறைசேரி அண்மையில் அறிவித்திருந்தது.

கச்சேரிக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்

சம்பளக் கமிஷனின் [illegible]து அறிக்கை கடந்த பெப்[illegible]வரி மாதம் 3-ம் திகதி வெளியா[illegible] அரசாங்க ஊழியர்களின் பென்சனை அதிகரித்து வழங்குவதென திறைசேரி [illegible]

## அரசாங்க அதிபர் தரும் விளக்கம்

பென்சன்காரர்களின் பாக் சந்தித்து தங்கள் [illegible] நிலைமை [illegible]

## "மோட்டார்சைக்கிளை வைக்க 1-ம் எதிரி இடம் கேட்டார்"

### பருத்தித்துறை நகைவியாபாரி கொலை வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, புதன்

1968ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ந் திகதி பருத்தித்துறை நகை வியாபாரியான எம். எம். சுல்தான் மொகதீன் என்பவரைச் சதி செய்து கொலைசெய்ததாக கொழும்பு இரகசியப்பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டது.

மாரிமுத்து தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "நான் மன்னம்பிட்டி என்னுமிடத்தில் புகையிரத இலாசாவில் தொழிலாளியாக வேலை செய்துவருகிறேன். சம்பவ தினம் எனக்கு நினைவிருக்கிறது. அன்று நான் வேலைத் தலத்தில் நின்றபோது

"முதலாம் எதிரியும் வேருெருவருமாக நான் வேலைசெய்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து, தாங்கள் ஓடிவந்த மோட்டார் சைக்கிள் பழுதடைந்துவிட்டதாகவும், அதைப் பாதுகாப்பாக வைத்துவிட்டுப் போய், மெக்கானிக்கைக் கூட்டிவந்து திருத்தி எடுத்துக்கொண்டு போவதாகவும், அதை வைத்துவிட்டுப் போக ஓரிடம் தரும்படியும் கேட்டபோது சைக்கிளை வைத்துவிட்டுச் செல்ல ஓரிடம் கொடுத்தேன்" என மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த வேலப்

## உலக ஜனத்தொகை 35 வருடத்தில் இரட்டிக்கும்

வாஷிங்டன், ஏப். 8

அடுத்த 35 வருடத்தில் உலக ஜனத்தொகை இரட்டிப்பாகும் என்று [illegible] ரிக்க [illegible] ஜனத்தொகை கணிப்புப் பணியகம் ஒன்று அறிவித்துள்

## செய்திபற்றி இவர்

உடுப்பிட்டி, வியாழன்

கடந்தசெவ்வாய்க்கிழமை ஈழநாடுஇதழில் 'கரவெட்டி இளைஞர்கொலை' என்னும் தலைப்பில் வெளியான செய்திபற்றிபருத்தித்துறை கூ. மொ வி ஸ்தாபன காசாளர் திரு கா வ சிவசுப்பிரகாசம் தெரிவிப்பதாவது:

பிரஸ்தாப கொலைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கி கரவெட்டி மேற்கிலுள்ள எனது வீட்டில் பொலிசாரால்கைப்பற்றப்பட்டதாகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான் கொலை நடந்த மறுநாட்காலை 6-45 மணிக்கு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையம் சென்று எனது வீட்டில் துப்பாக்கியை போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள் என்று தகவல் கொடுத்ததைத் தொடர்ந்தே பொலிசார் எனது வீட்டிற்குவந்து துப்பாக்கியை எடுத்தனர்.

வட்டுக்கோட்டை

## கி. ச. அங்கத்தவ காலமானர்!

யாழ்ப்பாணம், வியா

வட்டுக்கோட்டை கிராமசபை அங்கத்தவர் திரு. இ. சண்முகநாதன் நேற்று காலமாகிவிட்டார், அச்சகத்துறையில் நீண்டகால அனுபவமுள்ள இவர் 'சிலோன் பிரிண்டர்ஸ், 'ஈழநாடு' ஆகிய ஸ்தாபனங்களில் கடமையாற்றியுள்ளார்.

## கண்காட்சி

கோட்டை, வியா

லெனினின் நூற்றுண்டு தினத்தையொட்டி கொழும்புகலைக்கழகத்தில் லெனின் கண்காட்சியொன்றை விஞ்ஞான வீடமைப்பு மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன திறந்துவைப்பார்.

## பண்ணிசைவிழா

அகில இலங்கை சைவப் புலவர் சங்க திருமுறைப் பண்ணிசைவிழா மல்லாகம் இந்துகல்லூரி மண்டபத்தில் [illegible]

இவ்விழாவிற்கு சைவபூஷணம் [illegible] சிவப்பிரகாசம் தலைமை தாங்குவார். இவ் விழாவையொட்டிய [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...டுப் போக ஓரிடம் தரும்படியும் கேட்டபோது சைக்கிளை வைத்துவிட்டுச் செல்ல ஓரிடம் கொடுத்தேன்'' என மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த வேலப்பொடி மாரிமுத்து என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும் புகையிரத இலாகாவில் தொழிலாளியாக வேலை செய்துவருகிறேன். சம்பவ தினம் எனக்கு நினைவிருக்கிறது. அன்று நான் வேலைத் தலத்தில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் இருவர் வந்தனர். அவர்கள் தமிழில் என்னிடம் கதைத்தார்கள், நீங்கள் எந்த ஊரென்று கேட்டபோது யாழ்ப்பாணம் என்று சொன்னார்கள். பின்னர் தாங்கள் கொண்டுவந்த காசு செலவழிந்துவிட்டதா

(4-ம் பக்கம் பார்க்க)

வாஷிங்டன், ஏப். 8

அடுத்த 35 வருடத்தில் உலக ஜனத்தொகை இரட்டிப்பாகும் என்று அமெரிக்க தனியார் ஜனத்தொகை கணிப்புப் பணியகம் ஒன்று அறிவித்துள்ளது

இன்றைய உலக ஜனத்தொகை 361 கோடி 20 லட்சம் என்றும், வாரம் 14 லட்சம் உலக ஜனத்தொகை அதிகரித்து வருகின்றது என்றும் அப்பணியகம் தெரிவித்துள்ளது.

...டோபர் மாதத்திலிருந்து கணக்கிட்டு எதிர்வரும் சிங்கள, தமிழ்ப் புதுவருடத்... மாறு சகல கச்சேரிகளுக்கும் திறைசேரி அண்மையில் அறிவித்திருந்தது.

திறைசேரியின் உத்தரவுக்ிணங்க மற்றும் மாவட்டங்களில் குறித்த பணத்தை பென்சன்காரர்கள் இம்மாதம் 7-ம், 8-ம் திகதிகளிலேயே பெற்றுள்ளனராம். ஆனால் வடபகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான பென்சன்காரர்கள் நாளாந்தம் பாழ்...

சம்பளக் கமிஷனின் ... அறிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 3-ம் திகதி வெளியா... ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களின் பென்சனை அதிகரித்து வழங்குவதென திறைசேரி முடிவு செய்தது. அதிகரிக்கப்பட்ட பென்சன் பணத்தைப் புதுவருடத்துக்கு முன்னர் வழங்கவேண்டுமென மந்திரிசபை கடந்த மாதம் 20-ம் திகதி தீர்மானித்து, இதை அமுல்நடத்தும்படியும் திறைசேரிக்கு அறிவித்தது.

ஓய்வுபெற்றவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட பென்சன் பாக்கிப் பணம் கடந்த அக்டோபர் 1-ம் திகதியிலிருந்து கணிக்கப்பட்டு இம்மாதம் 7-ம், 8-ம், 9-ம் திகதிகளில் அந்தந்தக் கச்சேரிகளிலும் தபாற்கந்தோர்களிலும் வழங்கப்படுமென அரசாங்கம் அண்மையில் அறிவித்தது. இதன்பிரகாரம் நாடுபூராவுமுள்ள பென்சன்காரர்கள் தங்கள் பாக்கிப் பணத்தை புதுவருடத்துக்கு முன்னர் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தது.

ஆயினும் யாழ்ப்பாணக்கச்சேரியிலும், வடமாகாணத்தின் ஏனைய பென்சன் வழங்கும் தபாற்கந்தோர்களிலும் குறிப்பிட்ட பாக்கிப் பணத்தைப் பெறமுடியாமல் ஆயிரக்கணக்கான பென்சனியர்கள் கஷ்டமுறுகின்றனர்.

# அரசாங்க அதிபர் தரும் விளக்கம்

பென்சன்காரர்களின் பாக்கிப்பணத்தை புதுவருடத்துக்கு முன்னர் வழங்கும்படி திறைசேரி தங்களுக்கு அறிவித்திருந்தபோதிலும் இதை உடனடியாக நிறைவேற்ற முடியாதிருப்பதாக அரசாங்க அதிபர் திரு. எவ். ஸி. பீட்டர்ஸ் இதுசம்பம்பந்தமாக நமது நிருபர் விசாரித்தபோது கூறினர்

ஆயிரக்கணக்கான பென்சனியர்களின் பலமாதக்கணக்குகளைச் சீர்படுத்திப் பாக்கிப்பணத்தைக் கணக்கிட வேண்டியதிருப்பதால் சுணக்கம் ஏற்படுகிறது என்றும் அவர் சொன்னர். பென்சன்காரர்களின் தூதுக்குழுவொன்றும் இதுசம்பந்தமாக அரசாங்க அதிபரைச் சந்தித்து தங்கள் நிலைமையை விளக்கியது. ஆயிரக்கணக்கான பென்சன்காரர்களின் பாக்கிப்பணத்தை உடனடியாகக் கணக்கிட்டு வழங்குவதற்கு ஊழியர் பற்ருக்குறையாக இருப்பதாகவும் அரசாங்க அதிபர் தூதுகுழுவினரிடம் கூறினராம்.

இதுசம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுத்து பாக்கிப்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வடமாகாணத்தைச் சேர்ந்த பென்சன்காரர்கள் பலர் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்க வுக்கும் திறைசேரிக்காரியதரிசிக்கும் அவசரத் தந்திமூலம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

...புலவர் சங்க திருமுறைப் பண்ணிசைவிழா மல்லாகம் இந்துகல்லூரி மண்டபத்தில்...

இவ்விழாவிற்கு சைவபூஷணம் நம சிவப்பிரகாசம் தலைமை தாங்குவார். இவ்விழாவையொட்டிய ஊர்வலம் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் விசேஷ பூஷைக்குப் பின் ஆரம்பமாகி விழாமண்டபத்தை அடையும். ஓய்வு பெற்ற நீதிபதி வி. என். குமாரசாமி, சைவப்புலவர் பண்டிதைசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப் புலவர்மணி திரு த குமாரசாமிப்பிள்ளை, வைத்திய கலாநிதி எஸ் மாணிக்கம் சைவப் புலவர் வித்துவான் வ.செல்லையா ஆகியோர் உரையாற்றுவர். தொடர்ந்து யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையிலான திருமுறைப்பண்ணிசை தெரிவுப் போட்டியும் நடைபெறும்.

உரிமைகளைப் பெற

# மீண்டும் கூட்டுச்சேர நாங்கள் தயார்!

## அமிர்தலிங்கம் அறிவிப்பு



பூநகரி, புதன்

''இந்தப் பொதுத் தேர்தல் முடிந்த பின் எந்தக் கட்சி எமது உரிமைகளைத் தர விரும்புகின்றதோ அந்தக் கட்சியுடன் ஒப்பந்தத்துடன் கூட்டுச்சேர நாம் தயாராக உள்ளோம்''.

இவ்வாறு கிளிநொச்சி றொட்றிகோ பூங்காவில் கிளிநொச்சித.அ கட்சிவேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரத்தை ஆதரித்து நடந்த தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் எமது உரிமைகளை எந்தக் கட்சியும் தரவிரும்பாதபட்சத்தில் மீண்டும் உரிமைப் போராட்டத்தில் குதித்து தீவிர போராட்டம் நடத்துவதே எமதுநோக்கம் என்றார்

திரு. மு. ஆலாலசுந்தரம் பேசும்போது நான் தேர்தலுக்காகவே கிளிநொச்சிக்கு வந்தேன். இருபது வருடகாலமாக இக்கட்சிக்காக உழைத்தேன் எனது கட்சியின்கொள்கையைமுன் வைத்தே இங்கு நான் போட்டியிடுகிறேன் ஆகவே எனது கொள்கையை ஆதரித்தால் எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள் கா. பொ. இரத்தினம் வாலிபமுன்னணிச் செயலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட முடிவில் தமிழன்கதை என்னும் நாடகம் மேடையேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் அறிவிப்பு:

# இந்துக்களல்லாதோர் அனுமதிபெறவேண்டும கோயிலுக்குள் செல்ல!

சென்னை, ஏப். 8

இந்துக்களல்லாதோர் அனுமதி பெற்றே கோயில்களுக்குள் செல்லவேண்டுமென்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அறிவித்தார்.

அனுமதி பெற்றே கோயில்களு குள் செல்லவேண்டுமென்றும், விசேஷ வழிகாட்டிகளுடன்தான் அவர்கள் செல்லவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இந்துக்களல்லாதோர் பூசை நேரத்தில் கோயிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் தமிழக முதல்வர் தெரிவித்தார்.

## அதிகவாடகை வாங்கினல் நடவடிக்கை

கொழும்பு புதன்

அதிக வாடகை அறவிடும் மோட்டார் வாகனங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையை மோட்டார் திணைக்களம் மேற்கொண்டுள்ளது

இதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பையும் கேட்டுள்ளது.

வாடகை மோட்டார் வாகனத்தில் பிரயாணஞ் செய்யும் ஒருவர் சாரதி அதிக வாடகை அறவிட்டார் என்று முறைப்பாடு செய்யும்போது மோட்டார் வாகனத்தின் இலக்கத்தை தெரிவிக்க வேண்டும். அப்போது குறிப்பிட்ட வாகனத்தின் மீட்டர் பரிசோதிக்கப்படும்.

# 'பைத்தியக்காரனைப்போல் பிரதமர் டட்லி பேசுகிறார்!'

## முன்னாள் பிரதம நீதியரசர் கூறுகிறார்

காலி: வியாழன்

'பிரதமர் திரு. டட்லிசேனநாயகா இப்போது ஒரு பைத்தியக்காரனைப்போல் பேசுகிறார். இப்படிப்பட்ட ஒரு மனிதனிடம் ஆட்சிப்பொறுப்பைக் கொடுக்க இந்நாட்டிலுள்ள மக்கள் இனியும் தயாராக இல்லை'

காலியில் நடந்த கூட்டமொன்றில் இப்படிக்கூறினார் முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயக்கா.

சிங்கள-பௌத்த சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டம் காலிநகரசபை மைதானத்தில் நடந்தது.

தேசிய அரசாங்கத்தின் ஆபத்தையும் அடுத்தபொது தேர்தலின் முக்கியத்துவத்தையும் திரு. பஸநாயக்கா விளக்கிச்சொன்னார்.

வண. குணானந்ததேரோ தலைமைவகித்தார்.

திரு பஸநாயக்கா மேலும் சொன்னதாவது: தேசிய அரசின் 'முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் பௌத்தர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியை தேசியஅரசு காற்றில்பறக்கவிட்டது. சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் டட்லி சேனநாயகா சொன்னார், எதிர்க்கட்சி பலவீனமாக இருந்தால் ஜனநாயகத்துக்கு முடிவுஏற்பட்டுவிடும்என்று ஆனல் அதே பிரதமர் எதிர்கட்சியிலுள்ளவர்களுக்குபல விதமான பதவிகளைக்கொடுத்ததன் மூலம். தன்பக்கத்தில் சேர்த்துக்கொள்ளத் தொடங்கினர்.

'அடுத்து உணவுற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற்றுவிட்டதாக கூக்குரலிடுகிறார் ஆனல் உணவுற்பத்தியில் நாடுபடுதோல்வி அடைந்துவிட்டது.அது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

சிங்கள-பௌத்த பாதுகாப்புக்கு அடுத்த பொதுத் தேர்தலில் கூட்டாட்சியினருக்கு வாக்களிக்கும்படி முன்னாள பிரதம நீதியரசர் வேண்டுகோள விடுத்தார்.

# புதிய விரிவுரையாளர் 6 பேர் நியமனம்

கொடிகாமம், புதன்

பலாலி விசேட ஆசிரிய கலாசாலைக்குப் புதிய விரிவுரையாளர்களாக 6 பேர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு இம்மாதம் முதலாம் திகதி நியமித்துள்ளது.

விசேட வர்த்தக விரிவுரையாளராக சைவப்புலவர் அ. ஸ்ரீஸ்கந்தராசாவும், விசேட கணித விரிவுரையாளராக திரு. வி. நடராசாவும், விசேட கல்வி விரிவுரையாளராக திரு. எஸ். வேலாயுதபிள்ளையும், விவசாய விரிவுரையாளராக திரு. கென்ஸ்மனும், ஆங்கில விரிவுரையாளராக திரு வி. சுப்பிரமணிய ஐயரும், பரதநாட்டிய விரிவுரையாளராக திரு. வீரமணி ஐயரும் நியமிக்கப்பட்டுள்ளனர்

ஆசிரியகலாசாலையிலுள்ள கலைமண்டபத்தில் ஆசிரிய மாணவர்களால் விரிவுரையாளருக்கு வரவேற்பளிக்கப்பட்டது

வர்த்தக பிரிவை அரசாங்கம் மூட எடுத்த நடவடிக்கைகள் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து திரு. அ. ஸ்ரீஸ்கந்தராசா நியமனம் பெற்றுள்ளார்.

# தமிழருக்குத் தேவை சுயாட்சியே!

## தேர்தற் கூட்டத்தில் நவரத்தினம்



ஊரதீவு, புதன்

'சமஷ்டி ஆட்சியமைப்பைப் பொறுத்தளவில் அந்த அமைப்பை இரு சாகியத்தாரும் இணைந்தே அமைக்கவேண்டும் இன்றைய சிங்கள சமுதாயம் பூரணசம்மதத்துடன் எமக்கு சமஷ்டியை வழங்கத் தயாராயில்லை. எனவே சமஷ்டி அமைப்பு இலட்சியத்தை முன்வைத்துழைப்பதில் அர்த்தமில்லை. ஆனல் நாங்களே அமைத்துக் கொள்ளக்கூடிய ஒருஅமைப்புத்தான் சுயாட்சி அமைப்பு இதைப் பெறுவதற்கு இளைஞர்களின் மனோதிடமும், இலட்சியத்தின் மீது வைக்கின்ற தீவிர பற்றுதலுமே தேவையானது'

தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் கரம்பனில்நடைபெற்ற கட்சிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வ. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'தமிழர்கள் நடத்துகின்ற போராட்டங்கள் வெற்றிபெற வேண்டுமென்றால் எமது மக்கள் தொகை குறையக்கூடாது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு தமிழர் தொகையைப் பெருக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பெருக்கவேண்டும். இதை விடுத்து இருக்கின்ற தமிழர்களிலேயே ஐந்தேகால் லட்சம் தமிழர்களை வெளியேற்ற ஒப்புதல் வழங்கியது மாபெரும் தவருகும். இந்த இமாலயத் தவறை விட்டவர்களை தமிழினம் மன்னிக்கக்கூடாது'

நாரந்தனை கிராமசபை முன்னாள் தலைவர் திரு. சு. கதிரித்தம்பி. ஊர்காவற்றுறை ப. ச உறுப்பினர் பி. இம்மானுவல் திரு. ச. நீக்கிலாஸ், புங்கையூர் மகேஸ்வரன், பொன்கை வேந்தன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்

# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**உதவி வழங்கியோர்:**

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 9,497-07 |
| க. முத்தையா 'துவாரகை' தெல்லிப்பளை, தபாற்கட்டளை | 3-00 |

## மரண அறிவித்தல்

**இ. சண்முகநாதன்**

வட்டுக்கோட்டை கிராமசபை 3-ம் வட்டார அங்கத்தவரும், சிலோன் பிறின்ரர்ஸ், 'ஈழநாடு' ஆகிய ஸ்தாபனங்களில் கடமையாற்றியவரும், தமிழ்நாடு அச்சக உரிமையாளருமான சங்கரத்தையை சேர்ந்த திரு. இ. சண்முகநாதன் காலமாகிவிட்டார். இவர் தனலச்சுமியின் அன்புக் கணவரும், மூன்று பிள்ளைகளின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னரது பூதவுடல் சங்கரத்தையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 2 மணியளவில் சங்கரத்தை மயானத்துக்கு இறுதிக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். 2104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

C. V. 2900 இலக்கத் தொடர்புள்ள 3 1/2 அந்தர், செவலற் லொறி, லோட் மாஸ்றர் மிகவும் நல்ல நிலையில் உடன் விரைவில் விற்பனைக்குண்டு. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரைபார்வையிடலாம். வின்சிலோஸ், 149, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2017

### தவறிவிட்டது

'மகராசா துறவு' என்னும் நூல் கந்தர்மடத்துக்குத் தாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் கந்தர்மடம் வேதாந்தமடத்திலோ அல்லது 'ஈழநாடு' காரியாலயத்திலோ ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 2023

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியா. 9—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 நாடகம். 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10 30 செய்திச்சுருக்கம்.

## கேள்வி. விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டினம்

பின்வரும் கேள்விகளுக்கான 'சீல்' வைத்த கேள்விகள் 1970-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19-ந் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) கிளிநொச்சிப்பட்டின அலுவலக கட்டிட திருத்த வேலை.

(ஆ) கரடிப்போக்கு வாசிகசாலைக் கட்டிட திருத்த வேலை.

(2) கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 25/-ம் பத்திரப் பணமாக ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 18-4-70 பிற்பகல் 3-00 மணிவரை என்னால் வழங்கப்படும் இணைப் பிரதிகளில் கேள்விகள் விண்ணப்பம் செய்யப்படல் வேண்டும்.

(3) எல்லாக் கேள்விகளும் பதிவுத்தபால் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டிக்குள் போடப்படல்வேண்டும். கேள்விகளைக் கொண்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் எதற்கான கேள்வி என்பதைக் குறித்துவிட வேண்டும்.

(4) கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

(5) மேலதிக விபரங்கள் யாவும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

அ. அ. யோசேப்
விசேட ஆணையாளர்.
விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டினம்,
கிளிநொச்சி, 7-4-70
2213

யாழ்ப்பாணம், வெள்ளி புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்டுவரும் வி. நவரத்தினம் வெற்றிக்கேடயத்துக்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தினரும் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரும் மோதிக்கொண்டனர்:

தம்பாட்டி காந்தி சனசமூக நிலையத்தினரே இந்த மோதலில் வெற்றி பெற்றனர்.

## கேள்வி விண்ணப்பம்

### நெடுந்தீவு கிராமசபை

நெடுந்தீவு 5-ம் வட்டாரம் வண்ணாங்களி வீதிக்கு 20-4-70 நடுப்பகல் 12 மணி வரையும் 15,000 ரூபாவுக்குக் குறையாத பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் 19-4-70 மத்தியானம் 12 மணிவரையும் கிராமசபைக் கந்தோரில் வழங்கப்படும். கேள்விப் பிணையாக ரூபாய் ஐம்பதும் (50/-) பத்திரப் பணமாக பதினைந்தும் (15/-) செலுத்த வேண்டும். இப்பதினைந்தும் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது. ஏனைய விபரங்கள் கிராமசபைக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம். கிராமசபைத் தலைவருக்கு இதை ஏற்கவும் மறுக்கவும் உரிமையுண்டு.

A. T. அம்பலம்,
அக்கிராசனர்.

கிராமசபை காரியாலயம்
நெடுத்தீவு,
8-4-70. 2214

## தேர்தலுக்கு விசேஷ ரயில்சேவை

கோட்டை, செவ்வாய்

தேர்தல் தினமான மே மாதம் 27-ந் திகதி நாட்டின் சகல பகுதிகளுக்கும் விசேஷ ரயில்சேவை நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஊழியர்களின் வசதியை முன்னிட்டு இச்சேவை நடைபெறுகிறது.

தேர்தல் தினத்தன்று கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்கள் தொகையும், அவர்கள் எங்கிருந்து புறப்படுவார்கள் என்ற விபரத்தையும் ரயில்வே மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா தேர்தல் கமிஷனரிடம் கேட்டுள்ளார்.

## நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்தொகுதியைச்சேர்ந்த கலட்டி கலவன் எஸ். எஸ். டீ. ஏச் பாடசாலைக்கு கல்வி அமைச்சு ரூபா 17,734/70சதம் வழங்கியுள்ளது. கட்டிடம் திருத்தி அமைப்பதற்காகவே இப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் தொகுதியைச் சேர்ந்தஆடியபாதம்வீதியை திருத்திஅமைப்பதற்கு ரூபா 44,500 ரூபா அரசினரால் ஒதுக்கப்பட்டுள்ளது

... ... ...

### உடுவில் விளையாட்டுச்சங்க ஆதரவில்

# சுன்னாகம் பொலிஸார் நடத்தும் புத்தாண்டுப் போட்டிகள்

## 26 மைல் சைக்கிள் வீரருக்கு 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணம்

உடுவில், புதன்

வலிகாமம் வடக்கு உடுவில் விளையாட்டுச் சங்க ஆதரவில் சுன்னாகம் பொலிஸ்பகுதியினர் நடாத்தும் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண' 26 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி முக்கியஇடம் வகிக்கின்றது.

இம்மாதம் 14-ம் திகதி உடுவிலில் நடைபெறஇருக்கும் பொலிஸ் பகுதியினரின் புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி அன்று பகல் நடைபெற இருக்கும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் அதிக ஆர்வத்தையும் உற்சாகத்தையும் கொடுத்துள்ளது இப்போட்டி.

சுமார் ஐம்பதுக்கும் அதிகமானோர் இப்போட்டியில் பங்குபற்ற இதுவரை விண்ணப்பித்துள்ளதாக விளையாட்டுச் சங்கச் செயலாளர் திரு. அ. முருகையா தெரிவித்தார். இதில் பெரும்பாலானவர்களும் இளைஞர்களாம்.

புத்தாண்டுக் கொண்டாட்டப் போட்டிகளாக கரபந்தாட்டம், தாச்சிப்போட்டி, ஆண்களுக்கான 26 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, ஆண்களுக்கான 16 மைல் மரதன் ஓட்டப் போட்டி, போர்த்தேங்காய் அடித்தல், கிறிஸ்கம்பம் ஏறுதல், குழந்தைகளுக்கான மூன்று சில்லுச்சைக்கிள் ஓட்டம் போன்ற பல போட்டிகளும் நடைபெற இருக்கின்றன.

கரபந்தாட்டத்தில் 14 விளையாட்டுக்கழகங்களும், தாச்சிப்போட்டியில் 10விளையாட்டுக்கழகங்களும், சைக்கிள் போட்டிகளில் நூற்றுக்கு அதிகமாகவும் மரதன் ஓட்டத்துக்கு 50 பேர்வரையிலும் பங்குபற்றுகின்றனர்.

சுன்னாகம் பொலிஸ் பகுதி நடாத்தும் இப்போட்டி முடிவில் கலை நிகழ்ச்சிகள், பரிசுவழங்குதல் ஆகியன இடம்பெறும். இந்நிகழ்ச்சிகள் உடுவில் கிராமசபைத் திறந்தவெளியரங்கில் நடைபெறும். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உடுவில் தொகுதி முன்னாள் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பரிசில்கள் வழங்குவார்.

## அரை இறுதிப் போட்டி முடிவுகள்

உடுவில், புதன்

வலிகாமம் வடக்கு, உடுவில் விளையாட்டுச் சங்க ஆதரவில் சுன்னாகம் பொலிஸ் பகுதியினரால் நடாத்தப் படவிருக்கும் புத்தாண்டு விழாப் போட்டிகளுக்கான தாச்சி, கரபந்தாட்ட அரை இறுதித் தெரிவுப் போட்டிகள் முடிவடைந்தன. இறுதித் தெரிவுப்போட்டி இம்மாதம் 13-ம் திகதி வரை உடுவில் மான்ஸ் பாடசாலை மைதானத்திலும், சுன்னாகம் பட்டினசபை மைதானத்திலும் நடைபெறும்.

### கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

உடுவில் மல்வத்தை விளையாட்டுக் கழகத்திற்கும் இணுவில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் 2 - 1 பழங்களால் வெற்றிபெற்றது இணுவில் கந்தசாமிகோவில் வீதியில் நடைபெற்ற இப்போட்டிக்குத் திரு. எஸ். பதஞ்சலி மத்தியஸ்தம் வகித்தார்.

சுன்னாகம் இளந்தென்றல் 'ஏ' பிரிவுககும் இணுவில் இந்து விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சுன்னாகம் இளந்தென்றல் 2-0 பழங்களால் வெற்றியீட்டியது: சுன்னாகம் பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகககு திரு எஸ். பாலசிங்கம், திரு. எஸ். பதஞ்சலி ஆகியோர் மத்தியஸ்தம்வகித்தனர்.

சுன்னாகம் தெற்கு காந்திரூபன் விளையாட்டுக் கழகமும், உடுவில் கிழக்கு உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்ட மற்றோர் போட்டியில் காந்திரூபன் விளையாட்டுக் கழகம் 2-0கோல்களால் வெற்றியீட்டியது, சுன்னாகம் பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. எஸ் பாலசிங்கம், திரு எஸ் பதஞ்சலி ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

உடுவில்ஸ்டார் விளையாட்டுக் கழகமும் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் கலந்துகொள்ளவிருந்த போட்டிக்கு அண்ணா விளையாட்டுக் கழகம் வாபஸ் பெற்றுக் கொண்டதால் ஸ்டார் விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி கொடுக்கப்பட்டது.

### தாச்சிப்போட்டி முடிவுகள்

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் புன்னாலைக்கட்டுவன் மத்திய விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்ட போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் 22—0 பழங்களால் அமோக வெற்றியீட்டியது. அளவெட்டி இருள் மடத்தடியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு எஸ். பாலசிங்கம் எஸ். பதஞ்சலி ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக ஏ பிரிவினரும் உடுவில் மல்வத்தை விளையாட்டுக்கழக ஏ பிரிவினரும் கலந்துகொண்ட போட்டியில் அண்ணா கோஷ்டியினர் 9-3 பழங்களால் வெற்றி பெற்றனர். இணுவில் கந்தசாமி கோவில் வீதியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு கே. சிவப்பிரகாச பிள்ளை திரு எஸ். பாலசிங்கம், எஸ் பதஞ்சலி ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

அளவெட்டி மத்தியவிளையாடடுக் கழகத்துக்கும் உடுவில் புள்ளடஸ்விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அளவெட்டிகோஷ்டி 10-3 பழங்களால் வெற்றி பெற்றது. அளவெட்டி இருள் மடத்தடியில் நடை பெற்ற இப்போட்டிக்கு திரு எஸ். பதஞ்சலி, திரு அ. முருகையா ஆகியோர் மத்தியஸ்தம் வசித்தனர்.

உடுவில் மல்வத்தை 'பி' பிரிவுக்கும் இணுவில் இந்து விளையாட்டு கழகத்துக்கும் இடையில் நடைபெற இருந்த போட்டி இணுவில் இந்து கோஷ்டி சமுகம் அளிக்காமையால் மல்வத்தைக் கோஷ்டிக்கு வெற்றி கொடுக்கப்பட்டது

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 27-ம் திகதி [9-4-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன்தொல்லை அதிகரிக்கலாம். நிதானம்வேண்டும்.

**ரிஷபம்**- விரக்திநிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

**மிதுனம்**- கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்துக் கவலைகள் அதிகமாகும். பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு. சிறிய தவறுக்குகூட பெரிய தண்டனை கிடைக்கலாம். மனத்திடம்வேண்டும்.

**கடகம்**- சிந்தனைக் கணைகள் தாக்கும் சிறிவரும்கோபம் வேதனையைத் தரும். உடன்பிறந்த சகோதரத்தின் உடல்நிலையும் கவலையைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா ஆதரவாளருக்கு கத்திக்குத்து

விஜயவாடா, ஏப். 8

ஆந்திராவில் இந்திரா காந்தி காங்கிரஸ் காரியதரிசியை பலர் வழிமறித்து தாக்கியுள்ளனர். அவருடைய உடலில் 16 கத்திக் குத்துக் காயங்களுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர். இதுவரை எவரும் கைதாகவில்லை.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திர

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00

கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10 30 செய்திச்சுருக்கம்.

நிலையத்தினரும் மோதிக் கொண்டனர்:

தம்பாட்டி காந்தி சன சமூக நிலையத்தினரே இந்த மோதலில் வெற்றி பெற்றனர்.


# உடுப்பிட்டி அ.மி. கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

ஷெ சங்கம் 13-4-1970 பி. ப. நாலு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதில் தவருது கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

அ. மி கல்லூரி,
உடுப்பிட்டி,
7-4-70.

ச. செல்வத்துரை
அதிபர்.

2212



30 வருடங்கள் தங்கள் சேவையைத் திறம்படச் செய்துகொண்டிருக்கும்

## சன்லைட் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்

ஸ்தாபனத்தாராகிய நாங்கள் பல பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டர்சந்தியில் உள்ள 52-ம் இலக்கக் கட்டிடத்தில்

## சாயி றைக்கிளீனேர்ஸ்

கிளை ஸ்தாபனத்தை

### 11-4-70ல் ஆரம்பிக்க

நிச்சயித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொலைபேசி எண்: 474 தந்தி: றைக்கிளீன்
பஸ்நிலையப்பக்கம். யாழ்ப்பாணம்.


அமைப்பதற்காகவே இப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் தொகுதியைச் சேர்ந்த ஆடியபாதம்வீதியை திருத்திஅமைப்பதற்கு ரூபா 44,500 ரூபா அரசினரால் ஒதுக்கப்பட்டுள்ளது

... ... ...

## தாராகேசுவரிக்கு கறுப்புக்கொடி

அலகபாத், ஏப். 8

பிரதமர் இந்திராவின் சொந்த மாநிலமான உத்தரந்பிரதேசத்திற்கு சிண்டிகேட் தலைவர் தாராகேசுவரி சின்ஹா சென்றபோது அவருக்கு கறுப்புக்கொடி காட்டப்பட்டதுடன் 'சிண்டிகேட் ஒழிக' என்ற கோஷமும் எழுப்பப்பட்டது.

## நாம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல்நாட்டு நாடக உத்திகளை நாம் கையாள முடியும் மேல்நாட்டுச் சமூகப்பிரச்னைகள் அத்தனையும் மேல்நாட்டுநாடகங்களில் காணப்படுகின்றன. எமது மக்களின் பாரம்பரிய நாடக வழக்கு முறைகள்பற்றி நாம் சிந்திப்பது அவசியம்.

கலாநிதி திரு. க. கைலாசபதி பேசுகையில், ஈழத்தில் அதுவும்கொழும்பில் மேடையேற்றப்படும் தரமான நாடகங்களுக்கு மக்கள் குறைவாகவும் தரமற்ற வெறும் பொழுது போக்கு நாடகங்களுக்கு ரசிகர்கள் அதிகமாகவும் வருகிறார்கள். இது திருத்தப்படவேண்டிய விஷயம் என்றார்.

திருவாளர்கள் இ. முருகையன், செ. தங்கராசா, முத்துலிங்கம், கே. எஸ். சிவகுமாரன், இ. இரத்தினம், அம்பி, ஏ. கரீம், நீர்வைபொன்னையா ஆகியோரும்பேசினர்

செயலாற்றுக.

**மிதுனம்**- கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்துக் கவலைகள் அதிகமாகும். பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு. சிறிய தவறுக்குகூட பெரிய தண்டனை கிடைக்கலாம். மனத்திடம்வேண்டும்.

**கடகம்**- சிந்தனைக் கணைகள் தாக்கும் சீறிவரும்கோபம் வேதனையைத் தரும். உடன்பிறந்த சகோதரத்தின் உடல்நிலையும் கவலையைத் தரும்.

**சிம்மம்**- இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பானதினம். கல்வியிலும் நல்ல அபிவிருத்தி தென்படுகின்றது. ஆசிரியர்களுக்கு செல்வாக்குப் பெருக இடம்உண்டு.

**கன்னி**- இதயத்தில் இனிமையான எண்ணங்கள் தவழும். கடந்தகாலச் சம்பவம் ஒன்று எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி அமைக்கும். வேண்டிய ஒருவரின் உதவி உற்சாகமான சூழ்நிலையை உருவாக்கும்.

**துலாம்**- பகைமூட்டம் வட்டமிடும்; வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில்துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும். கடிதமென்று கவலையைத் தரலாம். மனத்திடம்வேண்டும்.

**விருட்சிகம்**- குடும்பத்தில் குதூகலம் தவழும். களஸ்திரவழியால் நன்மைகளுக்கு இடம் உண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். தொழில் துறையிலும் முன்னேற்றம் தென்படுகின்றது.

**தனுசு**- எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும். புதிய தொழில்களை இன்று திருத்திக்கொள்ளவும். மனத்தளர்ச்சிக்கு இடமளியாது நடந்துகொள்ளவும்.

**மகரம்**- தெய்வநம்பிக்கை மேலோங்கிநிற்கும். சிலருக்கு ஆத்மீகவிடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கும்பம்**- தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவை தாராளமாக பெறுவீர்கள். சகதொழிலாளர்கள் மத்தியில் ஆதரவு பெருகும் குடும்பத்திலும் இனிமையான சம்பவங்கள் உண்டு.

**மீனம்**- அதிர்ஷ்டதேவதையின் அணைப்பி உங்களுக்கு கிடைக்கலாம். திரைப்படத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு.

...ரோர் போட்டியில் சாந்தி ரூபன் விளையாட்டுக் கழகம் 2-0கோல்களால் வெற்றியீட்...


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - பத்மினி - சாவித்திரி
நடித்த
**சரஸ்வதி சபதம்**

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**கொஞ்சும் சலங்கை**

## REGAL JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 shows
Laurence Harvey,
Julie Christie
in
D A R L I N G
(adults only)

## MANOHARA

JAFFNA
Daily 4-45, 7&9-45 p m.
Paul Newman
in
COOL HAND LUKK
(Scope-color)



1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்



## சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
இங்ஸ்லி பிளாஸா ஸ்ரீகிருஷ்ணா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்



## இன்று முதல்

# ராணி சினிமா - யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் - கே. ஆர். விஜயா
நாகேஷ், சுந்தரராஜன், பாலாஜி, சி. கே. சரஸ்வதி
விஜயலலிதா, ராமதாஸ், புஷ்பமாலா,
சுந்தரிபாய், குழந்தைக்காக புகழ்பேபி ராணி
மற்றும் பலர் நடித்த

# திருடன்





# யாழ். வின்ஸர் வெண்திரையில்

புத்தாண்டுப் பரிசாக திரையிடப்படுகிறது!

தினசரி 4 காட்சிகள்

★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
★ பாரதி ★ மனோகர்
★ வெண்ணிற ஆடை நிர்மலா
★ ஓ. ஏ. கே. தேவர் ★ ஹரி கிருஷ்ணன்
முதலியோர் நடித்த
ஈ. வி. ஆர். பிக்சர்ஸ் அளிக்கும்

# தங்கச் சுரங்கம்

(முழு நீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பலோ-13 திட்டமிட்டபடி ஞாயிற்றுக்கிழமை புறப்படும்

## வீரர்களுக்கு தொற்றுநோய் எதுவும் இல்லை

கென்னடிமுனை, ஏப் 8

அப்பலோ-13 திட்டமிட்டபடி ஞாயிற்றுக்கிழமை புறப்படும். அப்பலோ பயணக் கட்டுப்பாட்டதிகாரிகள் இறுதியாக விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இதைத் தெரிவித்திருக்கிறார்கள்,

அப்பலோ-13 புறப்படுவதில் ஏற்பட்டிருந்த தடங்கல்கள் யாவும் நீங்கிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது அப்பலோ-13 வீரர்கள் ஜேம்ஸ் லொவல், பிரேட் ஹெய்ஸ், டொம் மட்டிங்லி ஆகிய மூவரும் திடகாத்திரமாக இருப்பதாகவும், அம்மை நோயினால் பீடிக்கப்படவில்லையென்றும் டாக்டர்கள் அறிவித்துள்ளனர்:

வீரர்கள் மூவரின் இரத்தங்களையும் டாக்டர்கள் நேற்று பரிசோதித்துப் பார்த்தனர். இரத்தத்தில் தொற்றுநோய் அறிகுறியெதுவும் இல்லையென்றும் அதனால் அவர்கள் தமது பயணத்தைத் தொடரலாம் என்றும் டாக்டர்கள் அறிவித்தனர்.

வீரர்கள் மூவரும் தமது இறுதிப் பயிற்சிகளை இன்று ஆரம்பித்தனர். சின்னம்மை கண்ட ஒருவருடன் வீரர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டதால் இவர்களுக்கும் தொற்றுநோய் பற்றிக் கொள்ளுமோ என்றுமுதலில் அஞ்சப்பட்டது. இதனால் அப்பலோ-13 செலுத்தப்படுவதும் பின்போடப்படலாமென்றும் கருதப்பட்டது ஆனால் டாக்டர்களின் உத்தரவு கிடைத்துவிட்டதால் திட்டமிட்டபடி அப்பலோ -13 புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

அப்பலோ-13 கலம் ஞாயிற்றுக்கிழமை 12-ம் திகதி இரவு 12-45 மணிக்கு கென்னடிமுனையிலிருந்து செலுத்தப்படும். இதில் செல்லும் மூன்று வீரர்களில் ஜேம்ஸ் லொவல் பிரயாணத்தின் தளபதியாகக் கடமையாற்றுவார்.

அமெரிக்கர்கள் மேற்கொள்ளும் மூன்றுவது சந்திரப்பயணம் இதுவாகும்.

கடத்தல் ஆசாமி

## பிரதமர் இந்திராவுக்கு தங்கதாயத்துகொடுத்தாராம்

### லோகசபையில் புகார்

புதுடில்லி, ஏப்.8

கடத்தல் புகார் கூறப்பட்ட அதிகாரி ஒருவர் பிரதமர் இந்திராவுக்கு தங்கத் தாயத்து கொடுத்தாராம்.

''டெல்லி அரசாங்க நிதி இலாகாவில் உள்ள இந்தி அதிகாரி ஒருவர் வெளிநாட்டுக்காரருடன் தொடர்பு கொண்டு கடத்தல் வேலையில் ஈடுபட்டுவருகிறார், தன் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்காக பிரதமர் இந்திரா காந்திக்கும் டெல்லி மந்திரிகளுக்கும் தங்கத் தாயத்துக்கொடுத்து இருக்கிறார். அவர் மீது விசாரணைநடாத்த கமிட்டி ஒன்று அமைக்க வேண்டும்'' என்று டில்லி சட்டசபையில் எஸ். சந்திரசேகரர் என்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்து நிதி இலாகா ராஜாங்க மந்திரி திரு. பி. சி. சேத்தி கூறியதாவது:

அந்த அதிகாரி நிதி இலாகாவில் ஆங்கிலத்தை இந்தியில் மொழி பெயர்க்கும் வேலைபார்த்து வருகிறார். ஆனால் வெளிநாட்டுக்காரருடன் தொடர்பு கொண்டு கடத்தல் வேலையில் ஈடுபடவில்லை. இந்திரா காந்திக்கு எந்தஅதிகாரியும் தாயத்துக் கொடுக்கவில்லை அவர் ஒரு ஜோசியர் ஜோசியத்தில் நம்பிக்கை உள்ளவெளிநாட்டுக்காரருடன்தொடர்புகொண்டிருக்கிறார். இவ்விவாதத்தில் பிரதமர் இந்திரா காந்தி குறுக்கிட்டு ''அந்த அதிகாரி மீதுகூறப்பட்ட குற்றச்சாட்டுப்பற்றி விசாரணை நடாத்தப்படும்'' என்றார்.

''64-ம் ஆண்டு முதல் பர்மாவிலிருந்து

## தமிழ் நாட்டுக்கு திரும்பியவர்கள் 94, 407 பேர்''

சென்னை, ஏப்.8

பர்மா தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிபற்றி தமிழ்நாடு சட்டசபையில் உறுப்பினர்கள் கேள்விகேட்டார்கள்.

பர்மாவிலிருந்து திரும்ப வேண்டிய தமிழர்கள் இன்னும் எத்தனைபேர் இருக்கிறார்கள், அவர்களுக்காக தேயிலைத் தோட்டம் அமைக்க எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது என்று தி,மு க. உறுப்பினர் எஸ். ஆறுமுகம் கேட்டார்.

இக்கேள்விக்கு அமைச்சர் மதியழகன் பதிலளிக்கையில் ''இன்னும் வர இருப்வர்கள்பற்றிய தகவல் தெரியாது. 64-ம் ஆண்டு முதல் 87 கப்பல்களில் வந்தவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 94,407பேர் ஆகும் சிலர் சிறுகடை நடாத்தவும் தையல் கற்றுக் கொள்ளவும், விவசாயம் செய்யவும் நிதி உதவிவழங்கப்பட்டது' என்றார்.

'பர்மா அகதிகள் வீடுகட்டிக் கொள்ள டில்லி அரசு 5 ஆயிரம் ரூபாவரை கொடுத்திருக்கிறதே. அதுபோல இந்தமாநில அரசும் ஏதாவது நிதி உதவி செய்ததா? சென்னை ''லட்டிஸ் பிரிட்ஜ் பகுதியில் பர்மா தமிழர்கள் கொலனி அமைக்க பண உதவி கேட்கப்பட்டதா''என்று காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த திரு [illegible] யகம் கேட்டார்.

பர்மா தமிழர்களின்மறுவாழ்விற்கான முழுச் செலவையும் டில்லி அரசாங்கமே [illegible]

வில்லிபிராண்ட் — நிக்ஸன்

## ராஜதந்திரிகள் கடத்தப்படுவது பற்றி ஆலோசனை செய்வர்

நியுயோர்க், ஏப். 8

அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருக்கும் மேற்கு ஜெர்மன் பிரதமர் ஷெர் பிராண்ட் வெள்ளிக்கிழமையன்று அதிபர் நிக்ஸனுடன் ஆலோசனைகள் நடத்துவார்.

லத்தீன் அமெரிக்காவில் வெளிநாட்டு ராஜதந்திரிகள் இடதுசாரி தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்படுவது குறித்து இவர்கள ஆலோசனைகள் நடத்துவர் என்று தெரிகின்றது. மேற்கு ஜெர்மன் தூதுவர் ஒருவர் கௌதமாலாவில் சில தினங்களுக்குமுன் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டது குறித்தும் இவர்கள் பேசுவார்கள் என்று தெரிகின்றது.

வெளிநாட்டுத்தூதுவர்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கு திரு, நிக்ஸன் தயாரித்திருக்கும் திட்டம்பற்றி இரு தலைவர்களும் ஆலோசனைகள் நடத்துவார்கள் என்று தெரிகின்றது

ஞாயிற்றுக்கிழமை அப்பலோ-13 சந்திரனுக்கு செலுத்தப்படுவதை ஷெர் பிராண்ட் பார்ப்பதற்காக கென்னடி முனைக்குப் போவார். லத்தீன் அமெரிக்காவுக்கான தமது விஜயத்தை ஷெர்பிராண்ட் ஏற்கனவே ரத்து செய்திருப்பது தெரிந்ததே.

## எகிப்திய ராணுவ நிலைகள்மீது [illegible]

## சீன-பாக். தாக்குதல் எதையும் இந்தியா எதிர்நோக்கத்தயாராம்

புதுடில்லி, ஏப் 8

சீனவும் பாகிஸ்தானும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்குதலில் இறங்கினால் அதை எதிர்த்து சமாளிக்க இந்தியா தயாராய் இருக்க வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருக்கும் ஓர் அறிககையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

1965ம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு சீன பெருவாரியான ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறது என்றும் சோவியத் யூனியனும் அதிக ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு வழங்கத் தொடங்கியிருக்கின்றது என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

திபேத்தில் பெருவாரியான சீனத்துருப்புகள் குவிந்துகிடப்பதாகவும் இதில் 1லட்சத்து 30 ஆயிரம் துருப்புகளிலிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் துருப்புக்கள்வரையில் இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

இந்தியகடற்படை தரைப்படை, விமானப்படைகளின் முன்னேற்றம்பற்றியும் தகுதிகள்பற்றியும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது கடற்படைகள் திருத்தப்பட்டு சீரான கடற்படையொன்று உருவாக்கும் ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் விமானப்படை அபிவிருத்தி செய்வதற்கு புதிய விமானங்களைக் கூடுமானவரையில் உள்ளூரிலேயே தயாரிக்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அறிக்கை கூறுகின்றது.

பாதுகாப்புப்படைகளுக்குத் தேவையான 'டாங்கி'களை தயாரிப்பதற்கான தொழிற்சாலையொன்றை விரைவிலேயே உருவாக்க முயற்சி நடப்பதாகவும் அறிக்கை கூறுகின்றது.

### முட்டாள்கள் மாநாடு

பனாஜி, ஏப். 8

முட்டாள்கள் தினமான இம்மாதம் முதலாந் திகதி முட்டாள்கள் மாநாடு இங்கு மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

பம்பாய் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பட்டமேற்படிப்பு நிலையத்தின் டைரக்டர் டி. பி. வாக் இக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார். அவருக்கு மூர்க்க சிரோன்மணி என்ற பட்டம் வழங்கப்பட்டது.

முட்டாள் தினத்தைப் பிரதிபலிக்கும் கழுதையின் சகோதரத்துவத்தைப் பாராட்டும்வகையில் கழுதையையே நம் நாட்டின் தேசிய விலங்காக ஏற்கவேண்டுமென்று இந்த மாநாட்டில் யோசனை கூறப்பட்டது.

### வேலணையில் இசைவிழா

வேலணையில் அண்மையில் நடைபெற்ற 3 நாள் இசை விழாவில் நடந்த கச்சேரிகளுள் குறிப்பிடத்தக்க அம்சங்கள் நிறைந்தவை திரு. பரம்தில்லைராஜாவின் கச்சேரியாகும் எவருக்கும் புரியும்படியாக விசேடமாக பாடசாலை மாணவர்கள் சகலருக்கும் உபயோகமான 'அன்னமே' என்ற ஆரபிராகவர்ணக் கீர்த்தனையுடன் அவர்கச்சேரியை ஆரம்பித்தார்வழக்கமாக விறுவிறுப்படைய உருப்படிகளோடு ''சபாபதி'' கோபாலகிருஷ்ணபாரதியார் கீர்த்தனையான பழம்பொருமை வாய்ந்த கீர்த்தனத்தில் சந்ததிகள் உதிர்க்கப்பட்டன. துக்கடாக்கள் வெகு அருமை ''தேவிஸ்ரீதேவி'' என்ற பாட்டை அவர் தமது மக்களோடு சேர்ந்துபாடியது கல்லூரி மாணவமாணவிகளை மெய்மறக்கச் செய்துவிட்டது.

விழாவில் பக்கவாத்தியம் வாசித்தோர் பலரையும் பாராட்டவேண்டியது நமது கடமை உயர்தர பக்கவாத்தியகாரரான திரு. வி. கே. [illegible]

## ''அவர் இடத்தை நிரப்ப இனி யார் வருவார்?''

தாவடி, புதன்

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் அவர்கள் தமது மொழி மதம், கலாச்சாரம் ஆகியவற்றை மக்களிடம் திணித்து ஆட்சியை நிலைப்படுத்தினர். அந்நியருடைய சமய கலாச்சாரத் திணிப்பினின்றும் சைவத் தமிழ்மக்கள் வாழ வழிவகுத்தவர் திரு. சு. இராசரத்தினம். எமது மொழி கலாச்சாரத்தை நிலைபெறச்செய்த பெருமை நாவலர் பெருமானுக்குப் பின்னர் அமரர் இராசரத்தினத்தையே சாரும் என்றால் அது மிகையாகாது அவரது இடத்தை நிரப்ப இனி யார் வருவார்?

இவ்வாறு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் திரு. வை. கதிர்காமநாதனின் தலைமையில் நடைபெற்ற அமரர் இந்துபோட், இராசரத்தினம் மறைவு குறித்து நடாத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய உடுவில் தொகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி தருமலிங்கம் குறிப்பிட்டார்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு ச. முத்துலிங்கம், திருமதி ஆ வேலுப்பிள்ளை, திருமதி ஆ சின்னராசா, திருமதி கு துரைச்சாமி, திரு சீ. கணபதிப்பிள்ளை, செ சோதிப்பெருமாள், சி சுப்பிரமணியம், வித்துவான் இ. திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினார்கள். பண்டிதர் இ. இராசலிங்கம் இரங்கல் பாக்கள் ஓதினார்.

## செய்திச் சுருக்கம்

### கட்டுப்பணம்கட்டும் நேரம் நீடிப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும் ஏப்ரல் மாதம் 23ம் திகதியன்று தங்களது கட்டுப்பணத்தை அன்றையதினம் பிற்பகல் [illegible]

[illegible]லுள்ள கனிஷ்ட தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றிலும் கட்டுப்பெத்தை இலங்கை தொழில்நுட்பக்கல்லூரியிலும் 1970ம்ஆண்டுமாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சை இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகின்றது.

0 0

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறித்து இவர்கள் ஆலோ... திருக்கும் திட்டம்பற்றி இரு... சனைகள் நடத்துவர் என்று தலைவர்களும் ஆலோசனை

# எகிப்திய ராணுவ நிலைகள்மீது இஸ்ரேலியர் விமானத்தாக்குதல்

## பீரங்கிச்சண்டையில் பலத்தசேதம்

டெல்அவிவ், ஏப். 8

எகிப்தியப் பிரதேசத்திற்குள் நேற்று இஸ்ரேலிய ஜெற்விமானங்கள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்திவிட்டுத்திரும்பியதாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர். சூயஸ் கால்வாய்ப்பிரதேசத்தில் எகிப்தியரின் எல்லையோரப் பகுதியிலுள்ள ராணுவ நிலைகள் மீது இந்தத்தாக்குதல் இடம்பெற்றதாக அவர்கள் அறிவித்தனர்.

இருதரப்பினருக்கு மிடையில் கடுமையான பீரங்கிச் சண்டைகள் இடம்பெற்றதாகவும் இதனால் எகிப்தியருக்கு பலத்த சேதம்ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் இஸ்ரேலியர் கூறினர். இந்த பீரங்கிச்சண்டையில் 3 இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாகவும் ஆறுபேர் காயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற விமானத்தாக்குதல்கள் சூயஸ் கால்வாய்பகுதியிலும், சூயஸ் வளைகுடாபகுதியிலும் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய படைமுகாம் ஒன்றை அரபு கொறில்லாக்கள் ஒளித்திருந்து தாக்கி சின்னாபின்னமாக்கிவிட்டதாக எகிப்தியர் அறிவித்திருப்பதை இஸ்ரேலியர் மறுத்துள்ளனர்.

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸரை யூதர்களின் உலக சபைத் தலைவர் சந்திக்கவிருந்ததை இஸ்ரேல் அரசு அங்கீகரிக்க மறுத்துவிட்டது குறித்து இஸ்ரேலிய ஆட்சிமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. இஸ்ரேலிய பிரதமர் திருமதி கோல்டாமெய்யரும், வெளிநாட்டுஅமைச்சர் திரு. அபா ஈபானும் சபையில் பேசுகையில், அரபுத்தலைவர்களை இஸ்ரேல் நேரடியாகச் சந்திக்கவே விரும்புகின்றது. எந்தச் சந்திப்பிலும் அரசின் அங்கீகாரம்பெற்ற ஒருவர் இடம்பெறுவதையே விரும்புகிறோம் என்று வலியுறுத்தினார்கள்.

சிரியா எல்லையில் நேற்று இடம்பெற்ற சண்டையில் இஸ்ரேலியரின் சண்டை விமானம் ஒன்றை சிரியர் சுட்டுவீழ்த்திவிட்டதாக அறிவித்ததை இஸ்ரேலியர் மறுத்துள்ளனர்.

## "வெடிகுண்டுகளால் மாற்றம் ஏற்படமுடியாது

### — கருணாநிதி

சென்னை ஏப்.8

வன்முறை வழி ஆபத்தானது. வெடிகுண்டுகளால் சமுதாயத்தில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. மாணவர் சமுதாயப் பிரச்னைகளை புரிந்துகொள்ளவேண்டும். உடனடியாக தீர்வு கூறுகிற ஆயுதங்களை கையில் எடுத்துக்கொள்ளக்கூடாது, பிரச்னைகளை தீர்க்கும் ஆயுதங்களை கூர் ஏற்றி இப்போது அந்தப் பிரச்னைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் எங்களுக்குத் தரவேண்டும்.

சென்னை அடையாறுசமையல் கல்லூரியில் அனைத்து கல்லூரி மாணவர் மன்றம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் 'இந்தியும் இன்றைய அரசும்' என்ற தலைப்பில் பேசிய தமிழ்நாடுமுதலமைச்சர் திரு கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் 'வறுமையால் ஏழைகள்வாடுகிறார்கள். அந்த வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதெல்லாம் உண்மை. ஆனால் வறுமையைப் போக்கிட அழிவு வேலைகளை மேற்கொள்ளலாகாது. ஆக்கவேலைகளையே மேற்கொள்ள வேண்டும். ஒன்றை அழித்துவிட்டுத்தானே இன்னொன்றை ஆக்கவேண்டும். என நீங்கள் வினவலாம். காட்டை அழித்துவிட்டால் கழனியை ஏற்படுத்தலாம். ஆனால் பானையை உடைத்துவிட்டு சமையல் செய்ய முடியாது.

சமுதாய மாற்றத்துக்கு அதுபோல் அழிவுவேலை பயன்படாது. ஆக்கவேலையே பயன்படும். பத்து வெடிகுண்டுகளை வீசுவதால் பெரியதொரு மாற்றம் நிகழ்ந்து விடமுடியாது. இந்திய நாட்டுச் சுதந்திரத்துக்காக பகத்சிங் வீசாத குண்டுகளா? சுகதேவ் காட்டாத வீரச்செயல்களா? ஆனால் அந்த வெடிகுண்டுகளால் சுதந்திரம் வரவில்லை. பொருளாதாரத் துறையானாலும் சரி சமூக மொழித்துறையானாலும்சரி வெடிகுண்டு முறை இல்லை. அமைதியான முறைதான் தேவை. அதில் தான் வெற்றி கிடைக்கும் என்றார்.

## கருத்தடைக்கு புதிய மாத்திரை

திருவனந்தபுரம், ஏப்,8

கருத்தடைக்கு புதிய மாத்திரையொன்றை கேரளத்தில் உருவாக்கியிருக்கிறார்கள். இந்தமாத்திரை முற்றிலும் உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மாத்திரைகளினால் தீங்கான விளைவுகள் எதுவும் ஏற்படாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரி. சினி நிபுணர் வருகிறார்

கொழும்பு, ஏப்ரல் 8

பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியரும், சினிமாத்துறை நிபுணரும், விமர்சகருமான டாக்டர் றொஜர் மானவெல் இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார், பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவின்கீழ் தூரகிழகு சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கும் டாக்டர் மான்வெல் ஏப்பிரல் 26-ந் திகதி இங்கு வருகிறார். இலங்கையில் அவர் 4 நாட்கள்வரை தங்கியிருப்பார்.

டாக்டர் மான்வெல் இலங்கையில் தங்கியிருக்கும் பொழுது தகவல் அமைச்சர் தகவல்மா அதிகாரி, சினிமா அரங்க அங்கத்தினர், அரசாங்க சினிமாப்பிரிவு அதிபர் மற்றும் ஒலிபரப்புத்துறை அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவார்.

"தற்கால பிரிட்டிஷ் சினிமா" என்னும் பொருள் பற்றி ஏப்பிரல் 27-ம் திகதி மாலை 5-30 மணியளவில் இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சபை மண்டபத்தில் அவர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார், ஏப்பிரல் 29-ம் திகதி தெஹிவளை கனிஷ்ட சர்வகலாசாலையிலும் அவர் சொற்பொழிவொன்றை நிகழ்த்தவிருக்கிறார்.

இக் கேள்விக்கு அமைச்சர் மதியழகன் பதிலளிக்கையில் "இன்னும் வர இருப்வர்கள்பற்றிய தகவல் தெரியாது. 64-ம் ஆண்டு முதல் 87 கப்பல்களில் வந்தவர்களில் தமிழ்நாட்டைச் ... பண உதவி கேட்கப்பட்டதா" என்று காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த திரு ... யகம் கேட்டார்.

'பர்மா தமிழர்களின்மறுவாழ்விற்கான முழுச் செலவையும் டில்லி அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திவருகிறோம். சென்னை வியாசர் பாடியில் இரண்டேமுக்கால் கோடி ரூபா செலவில் வீடுகள் கட்டும் திட்டத்தை டில்லி அரசு பரிசீலித்து வருகிறது. அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்" என்று திரு. விநாயகத்தின் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

## சவானுக்கு மதியழகன் கோரிக்கை

சென்னை, ஏப்ரல்.8

தேசாபிமானம் நாட்டு ஒற்றுமை ஆகியவற்றை மனதில் கொண்டு அரசியல் சட்டத்தை திருத்துவது பற்றி மறு பரிசீலனை செய்வதற்கு மத்தியஅரசு உள்துறை மந்திரி முன்வரவேண்டும், என்று தமிழ்நாடு நிதி மந்திரி திரு கே.ஏ.மதியழகன்மேல் சபையில் கூறினார்.

இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரேகட்சி மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் ஆட்சி செய்தபொழுது அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டது இன்று மாநிலங்களில் வெவ்வேறு அரசுகள் ஆட்சிசெய்கின்றன. மத்தியில் ஒரு விதமான ஆட்சி இருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் அரசியல் திட்டத்தை திருத்துவது அவசியமாகும் என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

## காங்கிரஸ் மாநாட்டுப் பந்தல் சரிந்து விழுந்தது

சென்னை, ஏப்.8

தஞ்சை மாவட்டம் மன்னார் குடியில் வருகிற 18, 19ம் திகதிகளில் நடக்கவிருக்கும் தமிழ்நாடு புதுக் காங்கிரஸ்கட்சியின் மாநாட்டுக்காக அமைக்கப்பட்டிருந்த பந்தல் பலத்த காற்றுக்கும் பேய் மழைக்கும் ஈடுகொடுத்து நிற்க முடியாது சரிந்து விழுந்தது. 1000 அடி நீளம், 400 அடி அகலம் கொண்டது இப் பந்தல்.

பந்தலை திரும்பவும் அமைப்பதில் சுமார் 500 பேர் ஈடுபட்டுள்ளனர். 'பந்தல் சரிவினால் மாநாடு எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை, திட்ட மிட்டபடி மாநாடு நடக்கும்' என்று மாவட்ட புதுக்காங்கிரஸ் கட்சித்தலைவர் கோபாலசாமி கூறியுள்ளார்.

## ஆங்கிலம் பற்றி மாநாடு

லண்டன், ஏப்.8

'ஆங்கிலம் ஒரு ஐரோப்பிய மொழி' என்னும் பொருள்பற்றி லக்சம் பேர்க்கில் ஒரு மகாநாடு நடைபெற விருக்கிறது. பிரிட்டனிலுள்ள பல்மொழி நிறுவனம் தனது வைரவிழா கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக இந்த மகாநாட்டை ஒழுங்கு செய்துள்ள லக்ஸம்பேர்க்கிலுள்ள ஐரோப்பிய பாராளுமன்றக் கட்டிடத்தில் ஏப்ரல் 11. 12ந் திகதிகளின்போது இம் மகாநாடு நடைபெறும்.

ஐரோப்பியசபை, ஐரோப்பிய கல்வி ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய ஸ்தாபனங்களும் இந்த மகாநாட்டுக்கு ஆதரவளிக்கின்றன. லக்சம்பேர்க்கிலுள்ள பிரிட்டிஷ் தூதர் திரு டொனல்ட் மல்கம் இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். உலகடங்கிலுமுள்ள பல்மொழி நிறுவனத்தின் அங்கத்தவர்கள் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

## சான்றிதழ் பெற்றனர்

சுழிபுரம், புதன்

மூளாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாணக்கல்விக் கந்தோரைச் சேர்ந்த திரு. க. பரமசாமி சமயபாடச் சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்கினார் தலைமையாசிரியர் திரு. க. ஞா. யோசப் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

...விகளை மெய்மறக்கச் செய்துவிட்டது.

விழாவில் பக்கவாத்தியம் வாசித்தோர் பலரையும் பாராட்டவேண்டியது நமது கடமை உயர்தர பக்கவாத்தியகாரரான திரு. வி. கே. குமாரசாமி, திரு. கே. சித்திவிநாயகம், திரு. ஏ. எஸ். ராமநாதன், வி. அம்பலவாணர் ஆகியோர் பாடகர்களுக்கு மிகவும் ஒத்தாசையாக வாசித்தார்கள்

திரு. ராம்குமாரசாமி அவரோடு சேர்ந்துபாடிய அவரது சோதரி திருமதி சத்தியபாமா ராஜலிங்கம் சபைக்குறிப்பறிந்து சேர்ந்து பாடினார்கள். இவர்களது இசைத்திறன் கச்சேரி ஆரம்பத்தில் அவர்கள் பாடிய 'சாதிஞ்சேனே' என்ற ஆரபிராகக் க்ருதியொன்றில் கச்சேரிகளை கட்டியதொன்றிலிருந்தே புலனாகும்.

விழாவைச் சிறப்பித்து மகுடம் வைத்தால்போல திரு. என். ஆர். கோவிந்தசாமியினதும் திரு. என். ஆர். சின்னராஜாவினதும் மங்களவாத்தியக் கச்சேரிகள் விளங்கின. ஈற்றில் நடந்தேறிய திரு. எம். வடிவேலு கோஷ்டியினரின் மேளக்கச்சேரியும் அபாரம், விழாவின் சிறப்பிற்குக் காரணங்களான வேலணை மத்திய கல்லூரி அதிபர் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். விநாயகலிங்கம், முன்னாள் எம். பி. திரு. வி. நவரத்தினம், கிராமசபை தலைவர்கள் திரு. கே. சதாசிவம் திருமதி மதியாபரணம், திரு. வி. அருணகிரி ஆகியோரையும் பாராட்டாதிருக்க முடியாது இசையோடொன்றித்த இன்ப வாழ்விற்கு வழிவகுத்த வேலணை இசைவிழா தீவுப்பகுதியில் ரசிகர்களும் கலைஞர்களும் மலிந்துள்ளதைக் காட்டுவதாயிருந்தது.

— ரசிகன்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும் ஏப்ரல் மாதம் 23ம் திகதியன்று தங்களது கட்டுப்பணத்தை அன்றையதினம் பிற்பகல் 1 மணிவரை செலுத்துவதற்குரிய ஒழுங்குகளை தேர்தல் இலாகா செய்து வருகிறது.

நியமனப் பத்திரங்கள்முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்படும். வழமைபோல் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின்சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் கட்டுப்பணமாக 250 ரூபாவும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் அபேட்சகர்களும் சுயேச்சையாளரும் ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0

### தொழில்நுட்பநிலைய பிரவேசப்பரீட்சை

மருதானை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிஅம்பாறை ஹாடி சிரேஷ்ட தொழில்நுட்ப நிலையம், இரத்மலானை, காலி, கண்டி யாழ்ப்பாணம், குருநாகல் அனுராதபுரம் கேகாலை. பதுளை ஆகிய இடங்களிலும் கட்டுப்பட்டத்தை இங்கை தொழில்நுட்பக்கல்லூரியிலும் 1970ம்ஆண்டுமாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சை இம்மாதம் 25-ந் திகதி ஆரம்பமாகின்றது.

0 0

### ஆசிரியர் பரீட்சை

இலங்கை பரீட்சைப்பகுதியினரால் நடாத்தப்படும் ஆசிரியர் தராதரப் பரீட்சை இம்மாதம் 24-ந் திகதி நடைபெறும்.

0 0

### அரசாங்கம் முடிவு

விவசாயத்துக்கு உபயோகிக்காமல் இருந்த அரசாங்கத்துக்குச்சொந்தமான 125 காணிகளை தனியாரிடமிருந்து அரசாங்கம் மீண்டும் பெற்றுக்கொண்டது. 588 காணிகள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தன. இவற்றில் பண்படுத்தி விவசாயம் செய்யாத காணிகளை அரசாங்கம் திருப்பிப் பெற்றுக்கொண்டது இவ்விதம் பண்படுத்தப்படாமல் இருக்கும் காணிகளைத் திருப்ப எடுத்து மற்றவர்களுக்கு கொடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## "நாம் மேல்நாட்டு நாடக உத்திகளை கையாளமுடியும்"

வெள்ளவத்தை, புதன்

"நாடகம் எல்லாக் கலைகளுக்கும் பொதுவானது. மக்களது கருத்து, உணர்ச்சி ஆகியனவற்றை வெளிப்படுத்துவது நாடகம். கலைஞரும் பார்வையாளரும் பரஸ்பரம் உணர்வுநிலையில் உறவாடிக்கொள்ளும் ஒரு கலையே நாடகம் ஒரு சம்பவத்தை நாடகமாக நடித்துக் காட்டுகின்றோம் என்றால் உளவியல் சமூகநடவடிக்கைகள் பற்றிய கருத்தைச் சுருக்கிச் சொல்கின்றோம் என்பதுதான் அர்த்தம்."

இவ்வாறு வெளிநாட்டில் தமது ஆராய்ச்சிப் படிப்பை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியுள்ள திரு. கா. சிவத்தம்பி கொள்ளுப்பிட்டி தேயிலைப் பிரச்சாரச்சபை மண்டபத்தில் நடைபெற்ற 'நாடகங்கள்' பற்றிய கலந்துரையாடலில் பேசுகையில் கூறினார்.

திரு. என். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தை இலங்கை கூத்தாடிகள் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

திரு. கா. சிவத்தம்பி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நாடகம் வளர்ந்துள்ளது என்று கருதப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

S. R. S. ஜவுளி மாளிகையில்

புதுவருட மலிவு விற்பனை

வெற்றிகரமாக நடைபெறுகிறது!

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி (போன்: 296) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வீண் ஏட்டுக்கல்வியினுல் எய்தும் பயனில்லை. நல்லொழுக்கமும் மனவலிமையும் விரிந்த அறிவும் வாய்க்கப்பெற்று, கற்றவனுக்குச் சுவாதந்திரியத்தைத் கொடுக்கத்தக்க கல்வியே கல்வி.

— சுவாமி விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 27-ந் திகதி (9-4-70)


## தேர்தலும் மக்களும்

பலநாடுகளிலும் முன்னர் முடியாட்சி முறையே இருந்துவந்தது சக்கரவர்த்திகள், மன்னர்கள், குறுநில மன்னர்கள் என்று தங்கள் தங்கள் வலிமைக்கேற்ப பலரும் சிம்மாசனத்தில் அமர்ந்து தங்கள் நாடுகளை. ஆட்சிபுரிந்து வந்தனர். அந்தக்காலத்தில் நாடு பிடிக்கும் ஆசையும் பல நாடுகளையும் அடிமைப்படுத்தி சாம்ராஜ்யம் அமைக்கும் ஆசையும் இருந்தது. அது பரம்பரை ஆசையாகவும் இருந்துவந்தது, மன்னன் ஒருவன் மாண்டால் அவன் மகன் பட்டத்து இளவரசன் தான் மன்னன் ஆவான். இன்று உலகில் பல நாடுகளில் முடியாட்சி ஒழிந்துவிட்ட தென்றாலும் நாடு பிடிக்கும் ஆசையோ, சிறு சிறு நாடுகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்ற ஆசையோ, அதிகார ஆசையோ இன்றும் இல்லாமலில்லை இன்றைய நமது பத்திரிகையின் நான்காம் பக்கத்தில் தேர்தல் நிறை பற்றி டாக்டர் மு. வரதராசனுர் எழுதியுள்ள கட்டுரையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் யாவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாமலிருக்கலாம். ஆயினும் முடியாட்சிக்காலத்தில் பரம்பரைமுறை இருந்து வந்ததுபோல் ஜனநாயக ஆட்சிமுறையைப் பின்பற்றும் இக்காலத்திலும் செல்வம், செல்வாக்கு என்ற பரம்பரைமுறை பின்பற்றப்பட்டு வருகிறதென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

நமது நாட்டில் தேதர்ல் சட்டம் திருத்தப்பட்டு தேர்தல் முறையில் பல நல்ல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதென்பதை மறுக்க முடியாது. அபேட்சகர்களின் பெயர்களுக்கும் சின்னங்களுக்கும் நேராக புள்ளடி போட்டுக் காட்டுவதிலிருந்து வாக்காளர்களை வாகனங்...

வருகிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும், ஆட்சி பீடத்தில் சேனநாயகா குடும்பம் அல்லது பண்டாரநாயகா குடும்பம்தான் அமர்ந்துவந்துள்ளதென்பதையும் இனியும் இந்த இரண்டிலொன்றுதான் அமரும்வாய்ப்புப்பெற்றுள்ளதென்பதையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

தேர்தல் சட்டமோ வேறு எந்தச் சட்டமோ அவை சரியாக இருந்தாலும், அவற்றைச் சரியாக நிறைவேற்ற அரசாங்கமும் அதிகாரிகளும் முனைந்தாலும் கூட பொதுமக்களும் குறிப்பாக வாக்காளர்களும் அந்தச் சட்டத்தை உணர்ந்து, தெரிந்து அறிந்து கொள்ளாத வரை செல்வமும் செல்வாக்கும் இங்கு ஒரு பரம்பரையை சிருஷ்டித்துக்கொண்டு தானிருக்கும்.

ஓர் ஆசிரியரின் நியமனம் அல்லது இடமாற்றம், ஓர் அரசாங்க ஊழியரின் நியமனம் அல்லது இடமாற்றம் இவை தான் ஆட்சிமன்ற உறுப்பினரின் வேலையா? தங்கள் தொகுதியில் எங்கு ஒரு மரணம் நடந்தாலும் எங்கு ஒரு திருமணம் நடந்தாலும் அங்கு தவருது சமூகமளிக்க வேண்டியது ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவரின் முக்கிய கடமையா? ஆட்சிமன்றத்தில் அங்கம் வகித்து மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்றால் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று ஒவ்வொருவரின் நாடியையும் தடவித்தான் வாக்குக்கோரவேண்டுமா?

இதை ஆட்சிமன்ற உறுப்பினர்களும், ஆட்சிமன்றத்துக்குப்போகவேண்டுமென விரும்பும் அபேட்சகர்களும் மட்டுமல்ல வாக்காளப்பெருமக்களும் நன்கு சிந்திக்க வேண்டும். சிந்தித்துச் செயலாற்றவேண்டும்.

ஆட்சிமன்ற உறுப்பினர்களின் கடமையென்ன...

# ஜனநாயகம் தோற்றால் சர்வாதிகாரமா வழி?

(தேர்தல்சூடு அதிகரித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் குடியாட்சித் தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடுகளைத் தனக்கே உரிய தனிப்பாணியில் இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். 1969 மார்ச் மஞ்சரி இதழில் வெளிவந்துள்ள இககட்டுரை இங்கு மறு பிரசுரம் செய்யப்படுகிறது.)

— டாக்டர் மு. வரதராசன் —

இன்றைய தேர்தல் முறையை அடிப்படையாகக்கொண்டு அமையும் குடியாட்சியில் ஜனநாயகத்தில் ஒத்துழைப்பு வளராமல் எதிர்ப்பு வழிகளே பெருகி வருகின்றன. மனித உணர்ச்சி குன்றி மந்தை உணர்ச்சி மேலோங்கச் செய்யும் தேர்தல் முறையே இதற்கு அடிப்படைக் காரணம் ஆகும். மனித உணர்ச்சியை மட்டுமே நம்பி நெறியோடு நடப்பவர்கள் தமக்கு வேண்டிய குழுவை வளர்த்துக் கட்சியில் செல்வாக்குப்பெற முடியவில்லை. மந்தை உணர்ச்சியை நம்பி அதற்குத் தீனிபோட்டு வளர்க்க வல்லவர்களே செல்வாக்குப் பெறமுடிகின்றது. நல்லது எங்கு இருந்தாலும் போற்ற முன்வருகிற பரந்த மனப்பான்மை உடையவர்கள்—எதிர்க்கட்சியாருடனும் ஒத்துழைக்கும் போக்குடையவர்கள்—செல்வாக்குப் பெறமுடிவதில்லை. சிறு குறையையும் பெருக்கிக் காட்டி மற்றக் கட்சியாரைத் தாக்குதாக்கெனத் தாக்கி எதிர்ப்புணர்ச்சியையே மேலும் மேலும் வளர்க்க வல்லவர்களே செல்வாக்குப் பெற முடிகிறது

### வாழத் தெரிந்தவர்கள்

மக்களிடையே தேர்தலுக்கு நிற்பவர் ஒருமுறை அரசியலில் இறங்கியபிறகு வாழ்நாள் முழுதும் அதை மாற்றிக்கொள்ள இயலாதவர். அரசியல் கட்சி வாழ்வென்பது வாழ்நாள் தொழிலாக அமைந்துவிடுவது. தேர்தலில் தோற்றாலும் அது விடாது; வென்றாலும் விடாது. ஒரு தோல்வி இரு...

வாழ்வு சீர்ப்பட்டு, நாடு முன்னேற வேண்டுமானால், கல்வி நலம் தடையின்றிப் பெருக வேண்டுமானால், அது ஒன்றே வழி என்று தலைவர்கள் பலரும் அறிவுரை கூறுகிறார்கள். கேட்டு நடப்பவர்கள் யார். நடக்குமாறு வற்புறுத்த வழி உண்டா; இல்லை. நாட்டில் நல்லபெயர் எடுத்துக் கொள்ள விரும்பும் அரசியலார் சிலர், தாமும் சேர்ந்து அறிவுரைகளை அள்ளி வீசி, ஆமாம் இனி மாணவர்களின் கல்வி வாழ்வில் கட்சிகள் புகக்கூடாது என்று நாடறியச் சொல்லி விட்டு பிறகு தம் அரசியல் வாழ்வு வளரும் வகையில் மாணவர்களை மறைமுகமாகத் தூண்டிவிட்டுப் பணத்தையும் செலவு செய்கிறார்கள். வேறு என்ன செய்ய முடியும்? அவர்கள் பற்றற்ற துறவிகள் அல்ல. எப்படியேனும் அரசியலால் வளம் பெற முயல்கிறவர்கள்; புகழ் பெற முயல்கிறவர்கள்; தேர்தல் முறையும் அதற்கு உரிய வழிவகைகளும் அவர்களின் மனத்தை மாற்றிவிடுகின்றன. அரசியல் அவர்களுக்கு வாய்ப்பான தொண்டாகத் தொடங்கிவாழ்நாள் தொழிலாக மாறிவிட்டதே: அவர்கள் என்ன செய்வார்கள்.

தொழிலாகக் கொள்வதற்கும் இடம் இல்லை. உழவனும், தொழிலாளியும், கிளார்க்கும், ஆசிரியரும் மற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பு அமைகிறது: பதவிக்கு வந்த பின் மூன்று ஆண்டுக் காலம் எந்தத் தொழிலிலிருந்தும் கட்டாய விடுமுறையும் அதற்கு ஈடு செய்யும்சம்பலமும் கிடைக்கும். பதவிக் காலம் வரையில் மனச்சான்றின்படி மந்தையுணர்ச்சிக்குக் கட்டுப்படாமல் தம்மால் ஆன தொண்டைச் செய்து விட்டுப்போகலாம். எதிர்காலம் எப்படி என்றும் அடுத்த தேர்தலுக்குப் பணம் சேர்க்க வேண்டுமே என்றும் சிறிதும் கவலைப்படாமல் உண்மையான தொண்டு செய்யலாம். பதவிக் காலம் முடிந்ததும் காத்திருக்கும் பழைய தொழிலுக்கு அமைதியாகச் சென்று மதிப்போடு வாழலாம்.

ஆனல் அறிஞர்பலர் இந்த முறைக்குத் தடைகள் பல எழுப்புவார்கள். எந்தப் புது நன்மைக்கும் உலகத்தில் தடைகள் எழாமல் இருந்ததில்லை. இன்று பழக்கப்பட்டு விட்ட ஒவ்வொரு நன்மைக்கும் தொடக்கத்தில் எவ்வளவோ எதிர்ப்பும் தடை...

ஒரு முடநம்பிக்கை என்ற தெளிவை நம் முப்பாட்டனிடம் எதிர்பார்ப்பதைப் போன்றதே இது.

அரசியலை வாழ்நாள் தொழிலாக அமைத்துக் கொள்ளும் சிலருக்கு மட்டும் உரிமை இருப்பதைவிட பலருக்கும் உரிமை இல்லாமல் இருப்பதே மேலானது. செல்வம் சேர்ந்தவர்களும் எப்படியோ செல்வம் சேர்க்கத் தெரிந்தவர்களுமே இன்று தேர்தலில் நின்று போட்டியிட்டுச் செலவுசெய்ய முடியும். தேர்தல் களத்துக்குவரும் உரிமை அவர்களுக்கு மட்டுமே உள்ளது. என் தந்தை நாட்டை ஆண்டார்; ஆகையால் அவருக்குப் பின் நாட்டை ஆளும் சிறப்பு எனக்கே உண்டு என்றுமகன் அரியணை ஏறும் உரிமை பற்றிய மூட நம்பிக்கை உலகெங்கும் இருந்தது. பிறப்பால் பெற்ற அந்த உரிமையைவிட செல்வத்தால் அல்லது எப்படியோ செல்வம் சேர்க்கும் திறமையால் பெறும் உரிமை மிகப் பொல்லாதது. இன்றைய தேர்தலில் ஒரு சிலர் பெறும் உரிமையில் மனித சமத்துவம் விளங்கவில்லை. ஆனல் திருவுளச் சீட்டு முறையில் அது நன்ருக விளங்கும்.

### மாற வேண்டும்

மனிதர் யாவரும் சரிநிகர் சமம் என்ற வாழ்க்கைத் தத்துவத்தை முதல் அறமாகக் கொள்ளாத காரணத்தாலேயே பழைய முடியாட்சி முறை சரிந்தது: முடியாட்சி முறை வராது வந்த மாமணி போன்றது. மனித இனம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு ஏறி நிற்கும் உயர்ந்த நாகரிகப் படியே குடியாட்சி முறை. முடியாட்சி முறை சரிந்தது போல் குடியாட்சி முறையும் வீழ்ச்சியுறவிடலாகாது பெரும்பாலோரை மந்தையாக்கி ஒருசிலர் மட்டுமே பதவியும் செல்வமும் பெறுவதற்கு வாய்ப்புத்தரும் தேர்தல் முறை மனித-சமத்துவத்தைக் குலைத்து வருகிறது. மனித சமத்துவத்தை ஒப்புரவு என்னும் அடிப்...

# பழங்கால தேர்தல்முறைக்கு ஒருசந்தர்ப்பம்கொடுத்தாலென்ன?

தோல்விக்குப் பிறகு கட்சியே பிடித்து வெளியே தள்ளினுலும் வேறு கட்சிக்குத் தாவி அங்கும் அந்த வாழ்வை வேறு வடிவத்தில்...

### மூன்று குறைகள்

இவற்றை எல்லாம் காணும் நல்ல மாணவர்களின் மனமும் கெடுகிறது மேலே குறித்த ஊழல்களைத்...

யும் இருந்தன என்பதை வரலாறு சொல்லுகிறது நாடகக் கலைக்கு எவ்வளவு எதிர்ப்பு இருந்து வந்தது. நாடகம் பார்த்தவர்களுக்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜெயராஜ் எழுதுவது

''கடவுள் இல்லை, இல்லை. இல்லவேயில்லை'' என்று தஞ்சாவூர் பேருந்து நிலையத்திலே (பஸ்ஸ்டாண்ட்) பல சுவர்களிலும் தாரினுல் எழுதியுள்ளது. இதைக் கண்டதும் சற்றே திடுக்கிட்டேன். ஆனுல் யாரும் இதை கவனிப்பதாகவோ கவலைப்படுவதாகவோ தெரியவில்லை. கடவுளை சற்றே மறந்திருந்த எனக்கு இதைக் கண்டதும், கடவுள் நினைப்பு மீண்டும் ஏற்பட்டது. அந்தமட்டில் இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்று சமாதானம் செய்து கொண்டேன்.

தஞ்சாவூர் பஸ் ஸ்டாண்டிலே பிரயாணிகள் வசதியாக உட்கார பல சிமெந்து பெஞ்சுகள் சாய்மானத்துடன் உள்ளன. ஸ்டான்டிலே ஆரஞ்சு, திராட்சை, ஆப்பிள், மாம்பழம் முதலிய பழங்களும். ரோஜா, மல்லிகை, மருவு, மருக்கொழுந்து, கதம்பம் முதலிய புஷ்பங்களும் மலிவாக விற்கின்றன. பழங்களே சாப்பிட்டு பசியாறலாம் போலுள்ளது. ஸ்டாண்டிலேயே ஓட்டலுமுள்ளது. பக்கத்தில் பிரயாணிகளுக்காக மாநகரசபையினர் 10 அறைகளை வசதியான முறையில் கட்டிவைத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 3 ரூபாய் வாடகை, ஆனுல் அறைகள் கிடைப்பது கஷ்டம். சுற்றிப் பல ஓட்டல்களும், அறைகளும் புதுப் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன.

தனிப்பட்டவர்களே பஸ் சர்வீஸ் நடத்துகிறார்கள். அரசாங்கம் நடத்தும் எக்ஸ்பிரஸ் பஸ் சர்வீஸ் தூர இடங்களுக்குச் செல்லுகின்றன. கட்டணம் சற்றே அதிகம் தஞ்சை பஸ் ஸ்டான்டில் எப்போதும் கூட்டம். திருவையாறு பஸ்ஸில் ஏறுவது பெரிய வித்தை. மூன்று பஸ்களைத் தவறவிட்டு, நான்காவதில் தான் ஏற முடிந்தது. தஞ்சை - திருவையாறு பஸ் போக்குவரத்து உரிமைமை ஒரே ஒரு தனிப்பட்டவருக்குக் கொடுத்துள்ளனர். குறித்த நேரத்துக்கு பஸ்களை விடுவதில்லை. பிரயாணிகள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல. இந்த ஏழுமைல் தூர பிரயாணத்துக்காக மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுமுள்ளது

பொதுமக்கள் இதையெல்லாம்எப்படி பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள்? என்று விசாரித்தேன்.

இவ்விதமான பிரசாரத்தால் ஆஸ்திகமே வளரும் என்றும், பிள்ளையார் உடைப்பு, இராமர்படை எரிப்பு இயக்கத்தால் எப்படி பிள்ளையார் வழிபாடும், ராமர் பக்தியும் தமிழகத்தில் அதிகரித்ததோ அதே போல் இப்புதிய நாஸ்திகப் பிரசாரத்தால் ஆஸ்திகமே வளருமென்று ஓர் ஆஸ்திக அன்பர் தெரிவித்தார். 'கடவுள்' என்பது பொதுப் பெயராதலாலும், அப்பெயரால் யாரும் வணங்குவதில்லையாதலாலும் பொதுமக்களுக்கு விஷயம் புரியவில்லை என்றும் முருகன், மாரியம்மன் என்று பெயர் சொன்னுல் மக்களுக்கு உணர்ச்சி ஏற்படலாமென்றும் மற்ருெரு அன்பர் கூறினுர்.

இந்த நாஸ்திகப் பிரசாரத்தைப் பற்றி தி. மு. க.வும் காங்கிரஸ் இரு கட்சிகளும் வேறு கட்சிகளும் ஒன்றும் பேசவில்லை. சுதந்திராகட்சி மட்டும் பொதுக் கூட்டங்களில் இதைப்பற்றிக் கண்டித்துப் பேசுவதாகத் தெரிகிறது. இது எப்படியாயினும் தமிழகத்தில் ஆங்காங்கே இக்கோடையிலே மாரியம்மன் திருவிழாக்கள், பால் குடம் எல்லாம் விசேஷமாக நடக்கின்றன. சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேல் இழுக்கப்படாமல் இருந்த திருவாரூர் பெரிய தேர் இம்மாதம் ஓடுவதற்கான விசேஷ ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திருவையாறு ஸ்ரீ தியாகராஜர் சமாதியிலே ஒவ்வொரு மாதமும் பகுள பஞ்சமியன்று இன்னிசை விழாக்கள் நடக்கின்றன. சென்ற பஞ்சமியன்று தஞ்சாவூர் கமலாமூர்த்தி (ஸ்ரீ அண்ணுசாமி பாகவதரின் சிஷ்யை) ஸ்ரீ தியாகராஜரின் சரித்திரத்தைப் பற்றி கதாகாலக்ஷேபம் செய்தார். இனிமையான குரல். கதை சொல்லுவது சுவையாக மனதில் பதியும் வண்ணமுள்ளது. ஈழத்துக்கும் அழைக்கலாம் ஆனுல்... அதன்பிறகு சின்னமௌலானுவின் நாகசுரக்கச்சேரி. இடுப்பில் பஞ்சகச்சத்துடன் வைதிகர்போல்...

சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதென்பதை மறுக்க முடியாது. அபேட்சகர்களின் பெயர்களுக்கும் சின்னங்களுக்கும் நேராக புள்ளடி போட்டுக் காட்டுவதிலிருந்து வாக்காளர்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவது வரை சில நல்லகட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வேறெந்த ஜனநாயக நாடுகளிலும் இல்லாதவகையில் இங்கு நேர்மையாகவும் நியாயமான முறையிலும் தங்கள் பிரதிநிதிகளை வாக்காளர் தெரிவுசெய்வதற்கு தேர்தல்சட்டம் வழிவகுத்துக்கொடுத்திருக்கிறது.

ஆனாலும் செல்வமும் செல்வாக்கும் இங்கும் ஒரு பரம்பரையை உருவாக்கி துக்குப்போகவேண்டுமென விரும்பும் அபேட்சகர்களும் மட்டுமல்ல வாக்காளப்பெருமக்களும் நன்கு சிந்திக்க வேண்டும். சிந்தித்துச் செயலாற்றவேண்டும்.

ஆட்சிமன்ற உறுப்பினர்களின் கடமையென்ன, அபேட்சகர்களின் பணி என்ன, வாக்காளர்களின் பொறுப்பென்ன? இவற்றைச் சட்டரீதியாக வரையறுக்க வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் உணர்ந்து நடந்தால் உண்மையான ஜனநாயகம் மலரும். இதே சமயம் வாக்குரிமையை உபயோகிக்காமல் விடுவதும் விவேகமல்ல என்பதையும் சுட்டிச்காட்ட விரும்புகிறேன்.

# இருபாடசாலைகளில் தலைமை ஆசிரியர் இல்லை

கொடிகாமம், புதன்

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் கடந்த 10 மாதங்களாக தலைமை ஆசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இங்கு தலைமை ஆசிரியராக் கடமையாற்றிய திரு. சி. செல்லத்துரை, வவனியா தொகுதியில் உள்ள பாடசாலையொன்றுக்கு இடமாற்றம்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த இடம் காலியாகவுள்ளது தற்பொழுது தலைமை ஆசிரியரின் பொறுப்பை ஆசிரியர் ம. முருகேசு ஏற்று நடத்துகிறார்.

கச்சாய் அரசினர் பாடசாலையிலும் கடந்த ஒரு வருடகாலமாக தலைமை ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. தலைமை ஆசிரியராக விருந்த திரு. மு. பதஞ்சலி இளைப்பாறிய பின்னர் புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை.

தலைமை ஆசிரியரின் பொறுப்பை ஆசிரியர் க. குமாரசாமி ஏற்றுநடத்திவருகிறார்.


## தேவை

வர்த்தக சித்திரங்கள் வரையத் தகுதிபெற்ற ஓவியர்கள் தேவை. உடன் நேரில் வரவும்: யாழ்ரன் ஏஜன்ஸி, ராமையாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2025


ஊர்காவற்றுறை

**திரு.வ. நவரத்தினம்**

நல்லூர்

**டாக்டர் நாகநாதன்**

கோப்பாய்

**திரு .சி. கதிரவேலுப்பிள்ளை**

உடுவில்

**திரு.வி. தர்மலிங்கம்**

இவர்களிடம் வாசகர்கள் கேட்க விரும்பும் கேள்விகளை சுருக்கமாகஎழுதி விரைவில் அனுப்பி வையுங்கள். அவற்றிற்கான பதில்களை 'ஈழநாடு' மூலம் அளிக்க இவர்கள் இசைந்துள்ளார்கள்.

**களம் அமைத்துக் கொடுக்கிறோம் வாசகர்களே! பயன்படுத்திக்கொள்ளுங்கள்**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# ஒருசந்தர்ப்பம் கொடுத்தாலென்ன!

தோல்விக்குப் பிறகு கட்சியே பிடித்து வெளியே தள்ளினாலும் வேறு கட்சிக்குத் தாவி அங்கும் அந்த வாழ்வை வேறு வடிவத்தில் நடத்தச் செய்வது. துறவி போன்ற மனப்பான்மை வந்தால் தவிர, ஒருமுறை களத்தில் குதித்த பிறகு அதுவே வாழ்நாள் தொழிலாகக்கொள்ள நேர்கிறது. ஆகவே மனித உணர்ச்சியைக் குறைத்து மந்தை உணர்ச்சிக்குத் தீனிபோட்டு வளர்ப்பதை ஒரு கலையாகப் போற்றுகிறவர்களே, அரசியலில் தொடர்ந்து செல்வாக்குடன் விளங்க முடிகிறது. ஒத்துழைப்புத் திறமை இருந்தாலும் அடக்கிக்கொண்டு எதிர்ப்புத் திறமையை வளர்த்துக் கொள்ள வல்லவர்களே நெடுங்காலம் அரசியல் வானில் செல்வாக்குடன் ஒளிரமுடிகிறது. இதுவே வாழ்நாள் தொழிலாக அமைந்துவிடுவதால் அடுத்த தேர்தல் களங்களுக்கு உரிய வகையில் எதிர்ப்பு வழிகளில்செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதோடு தவறான வழிகளிலும் செல்வத்தையும் பெருக்கிக்கொள்ள வல்லவர்களே வாழத் தெரிந்தவர்களாக விளங்கமுடிகின்றது.

## பணமும் ஊழலும்

இந்நிலையில் கள்ள வாணிபம், லஞ்சம் முதலியவற்றைக் குடியாட்சியில் ஒழிப்பது எப்படி? குடியாட்சிக்குள்ள வாணிகத்தையும் மற்ற ஊழல்களையும் வெறுக்கலாம்; ஆனால் குடியாட்சிக்கு உரிய தேர்தல் முறைகளுக்கு கள்ள வாணிகப் முதலிய ஊழல்களின் பணப் தேவைப்படுகிறது. இந்தத் தேவை உள்ளவரையில் ஊழல்களும் இருந்துவரும் விநோபா ஜயப்பிரகாஷ் முதலான சான்றோர் அறிவுரைகள் கூறலாம். ஆனால் அறிவுரைகளை ஏற்றுக்கொள்பவர் யார்? அவர்களைப் போல தேர்தல்களைத் துறந்தவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். அரசியலையே வாழ்நாள் தொழிலாக ஆக்கிக்கொண்டு தேர்தல் முறையை நம்பி. அதற்குத் தேவையான எதிர்ப்புவழிகளையும் மந்தை உணர்ச்சியையும் பெருக்கிக் கொண்டவர்கள் அந்த அறிவுரைகளைக் கேட்டு டக்க முடியுமா கேட்டு நடப்பதானால் அவர்களின் வாழ்நாள் திட்டமே குலைந்துவிடுமே. கல்வி நிலையங்களில் அரசியல் கட்சியாளர்கள் தலையிட்டு மாணவர்களின் மனத்தைக் கெடுக்கக் கூடாது. மாணவர்களின்

## மூன்று குறைகள்

இவற்றை எல்லாம் காணும் நல்ல மாணவர்களின் மனமும் கெடுகிறது மேலே குறித்த ஊழல்களைத் தொகுத்துச் சுருங்கக் குறிப்பிடுவதானால் பின் வருமாறு குறிப்பிடலாம்:

1. தேர்தல் முறை ஒத்துழைப்புத்திறமையை வளர்க்காமல் எதிர்ப்புத் திறமையை வளர்ப்பதாக உள்ளது.

2. மனித உணர்ச்சிக்கு இடம் தராமல் மந்தை வளர்ச்சிக்குத் தீனி போடுவதாக உள்ளது.

3. அரசியலை வாய்ப்புத் தொண்டாகத் தராமல் வாழ்நாள் தொழிலாக மாற்றுகிறது.

இந்த மூன்று குறைகளையும் ஒருங்கே போக்குவதற்கு ஒரே வழி உள்ளது அது என்ன? அரசியல் தொண்டு செய்ய விரும்புவோர் ஆயிரக் கணக்கானவரிடம் சென்று ஓட்டுப் பிச்சைக்கு கையேந்தி அவர்களின் மந்தையுணர்ச்சியைத் தூண்டும் முறையை ஒழிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலிலிருந்து திருவுளச் சீட்டுக் குலுக்கி அரசியல் தொண்டர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை வகுக்க வேண்டும். அது ஒன்றே வழி. அதுதவிர வேறுவழி இல்லை.

## திருவுளச்சீட்டு முறை

இந்த முறைக்கு ஏற்றபடி சிறு சிறு தொகுதிகள் அமைத்து. அந்தத் தொகுதிகளிலிருந்து மறைமுகத் தேர்தல்கள் வாயிலாகப் பெரிய பதவிகளுக்கு வரவேண்டும். அதாவது கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல் திருவுளச் சீட்டு முறையில் நடக்க வேண்டும். அதற்குப் பிறகு அவ்வாறு நூறு கிராமங்களில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பெயர்களிலிருந்து, வட்டப் பகுதித் தலைவர்கள் தொண்டர்கள் திருவுளச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பத்துப் பதினைந்து வட்டப் பகுதிகளின் தலைவர்களின் பெயர்களிலிருந்து, மாவட்டத் தலைவர்கள் திருவுளச் சீட்டால் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும். மாவட்டத் தலைவர்களின் பெயர்களிலிருந்து மாநிலத் தலைவர்களின் பெயர்கள் தேர்ந்தெடுக்கப்படும்: அவர்களை அமைச்சர்கள், இவ்வாறு நடத்தப்படும் தேர்தலில், தொண்டு செய்ய விரும்புவோர் வாக்காளரின் தயவுக்காகவோ அவர்களின் மந்தை உணர்ச்சிக்காகவோ கவலைப் படவேண்டியதில்லை, அவர்கள் அரசியலை வாழ்நாள்

யும் இருந்தன என்பதை வரலாறு சொல்லுகிறது நாடகக் கலைக்கு எவ்வளவு எதிர்ப்பு இருந்து வந்தது. நாடகம் பார்த்தவர்களுக்கெல்லாம் லண்டன் நகரப் பொலிசார் அபராதம் போட்ட காலம் ஒன்று உண்டு. வெளிநாட்டுப் படிப்புக்கும் போக்குவரத்துக்கும். அறிஞர்களே எதிர்ப்புத் தெரிவித்த நிலை இருந்தது. ஒழிப்புக்கு அறிஞர்கள் எவ்வெவ்வகையில் எதிர்ப்பாக இருந்தார்கள்; இன்றும் ஓரளவு இருந்து வருகிறார்கள்.

## மூடநம்பிக்கை

அறிஞர்கள் எழுப்பக் கூடிய தடைகளும் ஒன்று. குடிமக்கள், வாக்காளர்களாக விளங்கித் தம் விருப்பம் போல் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமைபோய் விடுகிறதே என்பது பெரிய தொருதடை. அது உண்மைதான் ஆனால் உரிமைஇருந்தால் தானே போய்விடும் என்று அஞ்ச வேண்டும். இன்று உள்ள ஊழலான தேர்தல் முறையிலும் அப்படிப்பட்ட உரிமை இருப்பதாகக் கருதுவது ஒருவகை மூடநம்பிக்கை, கிராமத்து உழவனோ, நகரத்துத் தொழிலாளியோ தன்மதிப்புக்கு உரிய ஒருவனைதான் நன்றாக அறிந்து மதிக்கும் ஒருவனை ஆதரித்து வோட்டு அளிக்க முடியாது. வோட்டு சாவடிகளில் பேய் நின்றதும், அங்கே உள்ள சீட்டில் காணும் மூன்று நான்கு பெயர்களில் ஒருவருக்கே வோட்டு அளிக்க முடியும். இவர்க்கு ஒட்டு அளிக்காவிட்டால் அவர்க்கு வெற்றி ஆகிவிடுமோ என்று அவரைத் தடுப்பதற்காக இவர்க்கு ஓட்டளிப்பவர் சிலர் வேறு வழியில்லையே. கொடுத்த பெயர்களில் ஒருவருக்குப் போடுவோம் என்று செய்வோர் சிலர். நீண்ட காலமாக ஊட்டப்பட்ட மந்தைஉணர்ச்சியால் ஒரு சின்னத்தை நம்பி அளிப்பவர் சிலர். அந்த மூன்று நான்கு பெயர்களை ஓட்டுச் சாவடிக்கு அனுப்பும் உரிமை. அரசியலை வாழ்நாள் தொழிலாகக் கொண்டு திரும்பத் திருப்ப மந்தை யுணர்ச்சியை எழுப்பி வந்த சில தலைவர்களுக்கு மட்டுமே உண்டு ஆகவே, தனி மனிதஉரிமை இன்றைய தேர்தல் முறையில் இருப்பதாகக் கனவு காண்பதே ஒரு வகை மூடநம்பிக்கை தான். இன்று அதில் சிக்குண்டு மயங்கிக் கிடப்பதால், இது மூடநம்பிக்கை என்று தெளிவு பிறப்பது அரிது; மிகமிக அரிது. நீண்டாமை பெரும்பாலோரை மந்தையாக்கி ஒருசிலர் மட்டுமே பதவியும் செல்வமும் பெறுவதற்கு வாய்ப்புத்தரும் தேர்தல் முறை மனித-சமத்துவத்தைக் குலைத்து வருகிறது. மனித சமத்துவத்தை ஒப்புரவு என்னும் அடிப்படைஅறத்தை நிலைநாட்டுவதற்காகவே ஏற்பட்ட குடியாட்சி முறை என்னும் நன்மைக்கு ஒரு களங்கமாக உள்ளது இன்றைய தேர்தல் முறை. இதுதவிர வேறுவழி இல்லையே என்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டு இந்தத் தேர்தல் முறையை காத்துவர முயன்றால்முயற்சி வீணாகும்,

## திருவுளச்சீட்டு முறை

குடியாட்சி முறை உள்ளபடியே போற்றத்தக்க அருமைப்பாடு உடையது. மக்கள் எல்லாருக்கும் சமமான உரிமை வழங்கும் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அது அமைந்தால் ஊழலுக்கும் இடம் இல்லை. திருவுளச்சீட்டு முறையே மற்ற முறைகளைவிட இந்தச் சமத்துவத்தைப் போற்றுவது. பலருடைய பெயர்களையும் ஒரு நிலையில்வைத்துச் சமமாகக் கருதி இவர்களுள் எவர் வரினும் சரி என்று துணியும் துணிவு இதில் உள்ளது. இந்த அளவுக்குச் சமத்துவம் வேறு எதிலும் இல்லை. இதில்பிறப்புக்குச் சலுகை இல்லை, பட்டம் படிப்பு முதலியவற்றிற்கும் சலுகை இல்லை. கட்சி வேறுபாடு இல்லை. கட்சிகள் தாமாகவே மறைந்து விடும். வாழ்நாள் அரசியலுக்கும் இடம்இல்லை; மந்தையுணர்ச்சியைப் பயன்படுத்தும் ஆற்றலுக்கும் இடம் இல்லை எதிர்ப்பு வழிகளைப் பெருக்கும் திறமைக்கும் இடம் இல்லை. எந்த வேறுபாட்டையும் கடந்து ஓர் அளவு அறிவும் திறமையும் உடைய குடிமக்கள் எல்லோரையும் சமமாக மதித்து நடத்தும் தேர்தல்முறை திருவுளச் சீட்டு முறையே.

சாதி வேறுபாட்டைவளர்த்துப் பழக்கப்பட்டு விட்டவர்கள் சாதி ஒழிப் என்றால் கலங்குகிறார்கள். அதுபோலவே திறமையாகப்பிரசாரம் செய்து பதவிகளைப் பிடித்து பழக்கப்பட்டவர்கள் திருவுளச் சீட்டு என்றால் அலறுவார்கள். திறமை போய்விடும் அறிவாற்றலுக்கு மதிப்பு இல்லையே. கண்டவர்கள் பதவிக்குவந்து விடுவார்களே என்றெல்லாம் கலங்குவார்கள். ஆனால் ஒன்று உணர வேண்டும். குடியாட்சிமுறை புழுத்து அழுகி எறியப்பட்டால் சர்வாதிகாரம்தவிர வேறு மாற்று இல்லை. சர்வாதிகாரத்தை வரவேற்பதைவிடச் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சீர்திருத்தத்தை வரவேற்பது நல்லது இன்று இதுவெறுங் கனவுபோல் தோன்றும். பழங்காலத்து வெறுங் கனவுகளாக இருந்தவை இன்று நடைமுறை அரசியல் ஆகி வருவதை நினைவில் கொள்ள வேண்டும்.

மக்களின் தேர்தலில்இதை செய்து பார்க்க இன்று மனம் இல்லாவிட்டாலும்மாணவர்களின் தேர்தலிலாவது இதை செய்து பார்க்கலாமே மாணவர்களிடையிலாவது மந்தையுணர்ச்சியும் எதிர்ப்பும் எதிர்ப்புவழிகளும் இல்லாதவாறு காக்கக்கூடாதா?

நன்றி: மஞ்சரி

வருகைக் கொடுத்துள்ளனர். குறித்த நேரத்துக்கு பஸ்களை விடுவதில்லை. பிரயாணிகள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல. இந்த ஏழு மைல் தூர பிரயாணத்துக்காக மணிக்கணக்கில் காத்திருக்கவேண்டியுமுள்ளது இதை ஆட்சேபிக்க, கடை அடைப்பு ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நடந்துள்ளன. சமீபத்தில் 'டவுன் பஸ்' சர்வீஸ் விடுவதால் சற்று நிவாரணம் கிடைத்துள்ளது. பெண்களுக்காக நான்கு பெஞ்சுகளை ஒதுக்கியுள்ளனர். மைலுக்கு 5 காசு (சதம்) வீதம் கட்டணம். குறித்த ஆசனங்களுக்கு அதிகமாக யாரையும் ஏற்றுவதில்லை. நின்றுகொண்டு யாரும் பிரயாணம் செய்ய முடியாது.

இருபது நிமிடங்களில் திருவையாற்றிலுள்ள 'காமராஜர்' பேருந்து நிலையத்துக்கு பஸ் வந்துவிட்டது. பஸ் நிலையங்களுக்கும் பல அரசாங்கக் கட்டடங்களுக்கும் அரசியல் தலைவர்களின் பெயர்கள் வைத்திருக்கிறார்கள்.

திருவையாறு பஸ் ஸ்டாண்டிலே சுவரிலே பல வர்ண எழுத்துக்களில் நாத்திக சுவரொட்டிகளைப் பார்த்தேன். "கடவுள் இல்லை. இல்லை இல்லவே இல்லை" "கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்" "கடவுளைப் பரப்புபவன் அயோக்கியன்" "கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி" என்று எழுதியுள்ளது. நால்வராலும் பாடல் பெற்ற ஸ்தலம் திருவையாறு. கடவுள் பக்தியைப் பரப்பிய அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் இவர்களும் மகாத்மாகாந்தியும் அயோக்கியர்களா? பலபல ஸ்தலங்களிலும் வழிபட்டு வணங்கும் லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களும் காட்டுமிராண்டிகளா? இஸ்லாமியர், கிறிஸ்தவர் உள்ளிட்டு தமிழகப்

குரல். கதை சொல்லுவது சுவையாக மனதில் பதியும் வண்ணமுள்ளது. ஈழத்துக்கும் அழைக்கலாம் ஆனால்... அதன்பிறகு சின்னமௌலானா வின் நாகசுரக்கச்சேரி. இடுப்பில் பஞ்சகச்சத்துடன் வைதிகர்போல் வேட்டி உடுத்து, அங்கவஸ்திரத்தை பக்தியுடன் இடுப்பில் கட்டிக்கொண்டு ஸ்ரீதியாகராஜ சமாதி கோயிலுக்கு முதலில் சென்று வழிபட்டார். கற்பூர தீபம் காட்டுகையில் கன்னத்தில் போட்டுக்கொண்டு, விபூதி பிரசாதத்தை இரு கைகளாலும் வாங்கி நெற்றியில் இட்டுக்கொண்டது, அவரது உயர் பண்பைக்காட்டியதுடன் பல உள்ளங்களையும் கவர்ந்தார். ஒரு கச்சேரிக்கு அவர் ரூபா 1200 முதல் வாங்குகிறாராம். ஆனால் இங்கோ இலவசக்கச்சேரி நாற்பது ரூபாய் கொடுத்தும், 'இன்று வெள்ளிக்கிழமை இல்லாவிட்டால் இதையும் திருப்பிக்கொடுத்துவிடுவேன்' என்று சொல்லி அதையும் அன்புடன் பெற்றுக்கொண்டாராம். அந்தப் பண்பாளரானகலைஞரவர்கள், அவரது நான்கு மணி கச்சேரியை ஏராளமான மக்கள் கூடி ரஸித்தனர்.

## நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் விழா

நீர்வேலி, வியாழன்

இன்று நீர்வேலி கந்தசுவாமிகோவில் 7ம்திருவிழா சிறப்பாக நடைபெறஇருக்கின்றது. இவ்விழாவில்திருப்பூங்குடியூர் திரு. வி. க. ஆறுமுகம் கோஷ்டியினரின் 'வள்ளிதிருமணம்' பற்றிய வில்லுப்பாட்டும் இடம் பெறும்.

## மோட்டார்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

கவும். கொஞ்சக் காசு தரும்படியும் கேட்டனர். நான் காசு இல்லையென்று சொல்லி 5 ரூபா கொடுத்தேன். அவர்கள் சைக்கிளை அவ்விடத்தில் விட்டுச் சென்று பின்னர் 3ம் நாள் மெக்கானிக்கையும் கூட்டி வந்து திருத்தி எடுத்துச் சென்றனர். சைக்கிளை எடுத்துஞ் செல்லும்போது என்னிடம் வாங்கிய பணம் 5 ரூபாவையும் திருப்பித் தந்துவிட்டார்கள்."

சி. பாஸ்கரன், க. கனகசபை, கி. சுப்பிரமணியம் ஆகியோரும் சாட்சியமளித்தபின் மேல்விசாரணை இம்மாதம் 19ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org